


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



முகவரி: V. Sivarajah
Am Windhovel 18A
47249 Duisburg-Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de



வங்கிவிபரம்:
Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து.

உலக நாடுகளில் முரண்பாடுகளை அடிக்கடி தோற்றுவிக்கின்ற காரணியாக மதம் இருந்து வருகின்ற அதே சமயம் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் மேம்படுத்துவதற்கு மிகப் பெறுமதியானதாகவும் மதம் விளங்குகின்றது என்பதை மறுத்துவிட முடியாது. அத்துடன் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கான அத்திபாரத்தையும் மதத்தினால் வழங்க முடியும்.முரண்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கும் அதனை முகாமைத்துவப்படுத்தி தீர்வொன்றை எட்டுவதற்கு காத்திரமான பங்களிப்பை மதங்களினால் வழங்க முடியும். இலங்கையில் பெரும்பான்மை சிங்கள மக்களினால் கடைப்பிடிக்கப்படும் பௌத்த மதமும் தமிழ் பேசும் மக்களில் பெரும்பான்மையினர் கடைப்பிடிக்கும் இந்து மதமும் இனங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும்.

மத ரீதியான கட்டமைப்புகள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகங்களின் நலன்களிலேயே அதிகளவுக்கு கரிசனைகளை வெளிப்படுத்தி வந்தமையே இனக்குழமங்கள் , மதக் குழமங்களிடையே தேசிய நல்லிணக்கத்தை கனதியான முறையில் கட்டியெழுப்ப முடியாமைக்கான காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. தென்னிலங்கையிலுள்ள அரசியல்வாதிகள் உட்பட சகல தரப்பினரினதும் பெருமதிப்புக்குரிய மகாநாயக்க தேரர்களிடம் ஆசீர்வாதம் பெறுவதற்கு செல்வோரிடம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை , நல்லிணக்கம் குறித்துப் போதிக்குமாறு நல்லூர் ஆதீன கர்த்தா கேட்டுக் கொண்டிருப்பதும் அதற்குப் பதிலளித்திருக்கும் அஸ்கிரிய பீட மகா நாயக்க தேரர் இந்துக்களும் பௌத்தர்களும் ஒன்றிணைந்து விசேடமாக இரு மதங்களையும் சேர்ந்த குருமார் ஒன்று சேர்ந்து மாற்றத்தை ஏற்படுத்த முடியுமெனக் கருத்து தெரிவித்தமையும் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய விடயம்.

அதேசமயம் பௌத்த , இந்து , இஸ்லாம் , கிறிஸ்தவ மதங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதி உயர் பீடமொன்றை ஏற்படுத்தி சந்தேகங்களை களைவதற்கும் நம்பிக்கையயு,ம் புரிந்துணர்வையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்புவதற்கும் முயற்சிகளை முன்னெடுக்க முடியும் . வாய்ப்புகளில் சமத்துவம் , நலிந்தவர்கள் மீதான பரிவிரக்கம் , கடந்த காலத் தவறுகளை சீர்படுத்தல் போன்றவை மூலம் இனங்களுக்கிடையில் அவசியமாகத் தேவைப்படும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியும்.
சர்வமத பேரவை போன்றவை இதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. அதேசமயம் மகாநாயக்க தேரர்கள் உட்பட சகல மதங்களையும் சேர்ந்த உயர் மட்ட குருமார்களின் அங்கீகாரம் பெற்ற உயர்பீடமொன்றை அமைப்பதன் மூலம் பல்வேறு தடைகளைத் தாண்டி நல்லிணக்க இலக்கை எட்ட முடியும். கடந்த காலத்தை எங்களால் மாற்றிக் கொள்ள முடியாது. ஆனால் எமது போக்கை மாற்றிக்கொள்ள முடியும்.


குற்றப் பழியை வேருடன் களைந்து மன்னித்து மறந்து விடுவதை உள்வாங்கிக் கொள்ளுமாறும் அகந்தையை ஒழித்து பணிவை உள்ளீர்க்குமாறும் வெறுப்புக்கு பதிலாக அன்பைப் பரிமாறிக் கொள்ளுமாறும் இவற்றின் மூலம் நிகழ்காலத்தை சௌகரியமானதாக்கிக்கொள்ள முடிவதுடன் எதிர்காலத்திற்கான நம்பிக்கையை ஏற்படுத்த முடியுமென்ற சிந்தனையை சகல மதங்களும் போதிக்கின்றன. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் மதத் தலைவர்களும் மத அமைப்புகளும் பல்வேறு வழிகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய பல்வேறு சந்தர்ப்பங்கள் உலகின் பாகங்களில் தோன்றியிருந்தன.

யுத்தம் முடிவடைந்து 5 வருடங்களை கடந்து கொண்டிருக்கும் நிலையிலும் இனங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை போதிய அளவுக்கு ஏற்படுத்தாமல் இருப்பது துன்பியலாகும். இனங்களுக்கிடையிலான தப்பபிப்பிராயம் , மேலாதிக்கவாத சிந்தனைகள் , பாரபட்சம் போன்றவற்றை இல்லாமல் செய்துவிடுவதற்குப் பதிலாக அதற்கு உரமூட்டி வளர்த்து அரசியல் அனுகூலம் பெற முயற்சிப்போரின் மனித நேயமற்ற எண்ணப்பாடுகளை இல்லாதொழிப்பதற்கு இதயசுத்தியுடன் முயற்சிப்பதன் மூலம் நல்லிணக்கம் என்ற பிரதான இலக்கை எட்ட முடியும். அதேசமயம் இதய சுத்தியின்றி உடனடி தேவைப்பாடுகளின் நிமித்தம் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கம் ஒருபோதும் நிரந்தரமானதாக அமையமாட்டாது -ஆசிரியர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் வட்டம்!.



## ஆசைக்கும் எல்லையுண்டு!.

ஒரு காட்டு இலாக அதிகாரிக்கு அழகான மகள் ஒருத்தி இருந்தாள். ஒரு நாள் பட்டாட்பூச்சி ஒன்றைத் துரத்திக்கொண்டு அந்தப் பெண் காட்டிற்குள் ஓடியபோது அவளை ஒரு சிங்கம் கண்டுவிட்டது. அந்தச் சிங்கத்துக்கு அவளைப் பிடித்துவிட்டது. அந்தச் சிங்கம் நேரடியாக அந்தக் காட்டு இலாகா அதிகாரியிடம் சென்று அவளைத் தனக்குத் திருமணம் செய்து தரும்படி கேட்டது. அதிகாரிக்குச் சிங்கத்திடம் பயம். அதனால் "இல்லை" என்று சொல்ல முடியவில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தார். அவருக்கு ஒரு எண்ணம் தோன்றியது. அவர் சிங்கத்தைப் பார்த்து"காட்டுராஜ...காட்டுராஜா.. என் மகள் ரொம்பவும் பயந்தவள். உன்னுடைய பற்களையும் நகங்களையும் எடுத்துவிட்டால் அவளுக்குப் பயம் தெளிந்துவிடும் அப்புறம் நான் அவளை உனக்குத் திருமணம் செய்து தருகிறேன் என்று சொன்னார்.

அந்தப்பெண்மீது கொண்ட அசையால் சிங்கம் அதற்குச் சம்மதித்தது. காட்டு இலாக அதிகாரி முதலில் அதன் பற்களைப் பிடுங்கினார். அதன் பின் நகங்களை வெட்டினார். பற்களையும் நகங்களையும் இழந்த சிங்கம் பலம் எல்லாவற்றையும் இழந்து ஆட்டுக்குட்டிபோல் ஆகிற்று. உடனே காட்டு அதிகாரி ஒரு தடியை எடுத்து சிங்கத்தை அடித்து விரட்டி விட்டார். நடக்க முடியாததற்கு ஆசைப்பட்டால் நடக்குமா!..நடக்க முடியாததற்கு ஆசைப்பட்டால் நட்டம் நமக்குத்தான் எனப்புரிந்துகொண்டு தம்பினோம் - பிழைத்தோம் எனக்கூறியபடி சிங்கம் ஒரே ஓட்டம் பிடித்தது!..

சகோதரிகிளாடிஸ்ஜெ
"ஸ்ரீந்" மிஷன் -
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்

## அரவம் ஆட்டேல்

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பது பழமொழி. எத்தனை தைரியசாலியானாலும் "பாம்பு" என்று கூறினால் பதறி ஓடுவான். ஏன்!.. பாம்பிடம் கொடிய நஞ்சு உண்டு. கடித்தால் மரணம் நிச்சயம். எல்லாப் பாம்புகளுமே விஷமுடையதல்ல என்று உனக்குத் தெரியும். ஆனாலும் பாம்பு என்றாலே விஷப்பாம்பு, நாகபாம்பு, நல்லபாம்பு என்ற நினைப்புத்தான் வரும். பாம்பாட்டிகள் பாம்புகளை ஆடவைத்துப் பிழைப்பு நடாத்துகிறார்கள். அரவங்களோடு பழகும் இவர்களுடைய வாழ்நாள் அரவத்தினாலேயே முடியும். அரவம் என்றால் பாம்பு. ஆகவே குழந்தைகளாகிய நீங்கள் அரவங்களைப்பிடித்து பாம்பாட்டிபோல ஆட்டி விளையாட்டுக்காட்ட முயற்சி செய்யக்கூடாது. ஆபத்தான அரவத்தை ஆட்டுவிப்பதை செய்யாதே என்கிறது ஆத்திசூடி. பாம்புகளோடு விளையாடாதே. இதேபோல் நாம் பாம்புபோன்ற குணமுடையோரிடமும் நட்பு வைக்கக்கூடாது.

## இலவம் பஞ்சில் துயில்

நீ இரவில் எதில் படுக்கிறாய். சிலர் வெறுந்தரையிலும் படுப்பர். இன்னும் பலர் பலகைக்கட்டில் , மெத்தை, பாய் எனப்படுத்துறங்குவார்கள். தூங்கும் விஷயத்திலும் நமக்கு நன்மைதரும் முறையில் தூங்குவதற்கு யோசனைகூறுகின்றார் ஔவைப்பாட்டி. இலவு என்ற ஒரு மரம். இந்த மரத்தின் காய்களிலிருந்துதான் இலவம் பஞ்சு கிடைக்கின்றது. இது மென்மையானது. மிருதுவானது. உடலுக்கு இதமானது. இந்த இலவம் பஞ்சு அடைத்த மெத்தையில் படுத்துத் தூங்கினால் ஆழ்ந்த அமைதியான உடலுக்கு இதமான தூக்கம் வரும். நோய் அணுகாது. ஆகவே நீ இலவம் பஞ்சு அடைத்த மெத்தையில் துயில்கொள் என்கிறார் தமிழ்ப்பாட்டி. துயில் என்றால் தூங்கு என்று பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறாக்களின் விந்தை.

முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும் பறவையினத்தைச் சேர்ந்த புறாக்களில் 289 இனங்கள் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது. இவை அனைத்தும் "கொலம்பிடே" என்ற பறவை இனத்தைச் சேர்தவையே. இவற்றில் மலைப்புறா இனம் அதிக முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். இவற்றை வீடுளிலும் வளர்க்கிறார்கள். அப்பறவைகள் செங்குத்தான பாறைகளில்கூட கால்களை ஊன்றிப் பற்றிக்கொண்டு நிற்கும். இவற்றைச் "சுவரொட்டிப் பறவை" என்று அழைப்பார்கள். "ஹொமிங் பிஜன்" என்ற புறா இனம்தான் வேகமாகப் பறக்கக்கூடியதாகும். முற்காலத்தில் செய்திகளை அனுப்புவதற்கு இந்தப் புறாவைத்தான் பயன்படுத்தினார்கள். அதற்கமைவாகக் கடிதங்களை மெல்லிய ஓலை அல்லது காகிதத்தில் எழுதிச் சுருட்டி இதன்கால்களில் கட்டி அனுப்பினர். நியூகினியாவைச் சேர்ந்த "க்ரோண்ட்" புறாக்கள் அளவில் பெரியவையாகும். மிகச்சிறியவை "ஜெனஸ் கொலம்பீனா" என்ற இனத்தைச் சேர்ந்த புறாக்களாகும்..

புறாக்கள் உலகெங்கிலும் வாழ்ந்தாலும் இந்தியா, மலேசியா, இந்தோனிஷியா போன்ற தென்கிழக்கு ஆசியநாடுகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. பறவைகளில் புறா மட்டுமே நீரைத் தன் அலகால் உறுஞ்சிக் குடிக்கும் பழக்கமுடையதாகும். புறாக்களில் ஆண்புறாக்கள் கூடுகட்டுவதற்கு உரிய குச்சிகளைக் கொண்டுவந்து சேர்க்கின்றன. பெண்புறா கூடுகட்டும். பெண்புறா ஏப்ரல் மாதம் முட்டைகளை இடும். ஆனால் ஆண்புறாதான் அவற்றை அடைகாக்கும். புறாக்கள் தாங்கள் தின்ற பாதி செரித்த உணவுகளை மீண்டும் வாய்க்குள் கொண்டுவந்து குஞ்சுகளுக்கு ஊட்டுகின்றன. இந்த இரைக்கு "பிஜன் மில்க்" என்று பெயர். புறாக்களுக்குத் திசைகள் பற்றிய உணர்வுகள் அதிகமாகவே இருக்கும். தமது இரையைத்தேடி பல மைல் தூரம் சென்றாலும் பின்னர் தமது இருப்பிடம் தேடிச் சரியாக வந்து சேர்ந்துவிடும். புறாக்களைப் பலர் வீடுகளில் வளர்த்து அதன் முட்டைகளை விற்பனை செய்கிறார்கள். இன்னும் சில காட்டுவாசிகள் புறா இனங்களை உணவுக்காக வேட்டையாடி உண்கிறார்கள். இன்னும் பலர் வீட்டின் செல்லப்பறவையாகவும் வளர்த்து மகிழ்கிறார்கள்.

இறிலக்சனா.
"ரூத" மிஷன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

1. முதலையின் அடிவயிற்றுப் பகுதியின் தோலில் இருந்துதான் குண்டு துழைக்காத உடை தயாரிக்கப்படுகின்றது.

2. இரண்டு தேசிய கீதங்களைக்கொண்ட நாடு அவுஸ்திரேலியாவாகும்.

3. இங்கிலாந்து நாட்டின் தேசிய சின்னம் ரோஜா.

4. இரவு வேளைகளிலும் ஒட்சிசனை வெளிப்படுத்தும் தாவரம் துளசி, மரம் அரசமரமாகும்.

5-சுமார் 93 நாடுகளில் ஒரே நேரத்தில் விற்பனையாகிப் புத்தக உலகில் சாதனை படைத்தது "ஹெரிபொட்டர்" இப்புத்தகத்தை எழுதியவர் பிரித்தானியாவைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் ஜே.கே. ரோலிங் ஆவர்.

## கண்ணீர்!.

எமது கண்கள் எப்போதும் ஈரப்பதனாக இருக்க வேண்டும் இதற்காகக் கண்களின் மேற்பரப்பில் கண்ணீர்ச் சுரப்பிகள் உள்ளன. இந்தச் சுரப்பிகளில் சுரக்கும் நீர் நாம் இமைக்கும்போது கண்ணின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவிக் கண்ணை ஈரமாக வைத்திருக்கிறது. அதிகளவிலான துன்பங்களுக்கு நாம் ஆளாகும்போது, அல்லது வெங்காய வாசனையை நுகரும்போது இந்தக் கண்ணீர்ச் சுரப்பிகள் தூண்டப்படுகின்றன. இதன்காரணமாக வழக்கத்தைவிட அதிகமான நீர் உற்பத்தியாகின்றன. இவ்வாறு உற்பத்தியாகும் நீர் இமையோரத்தில் தேங்கிக் கண்ணீர்த்துளிகளாக வெளியேறுகின்றன. அளவுக்கதிகமாகக் கண்ணீர் வெளியேறுகின்றபோது மூக்குத்துவாரங்கள் வழியாகவும் கண்ணீர் வரும். கண்ணுக்கும் மூக்குத் துவாரத்துக்கும் தொடர்பிருப்பதே இதற்குக் காரணமாகும் இந்தக்கண்ணீரில் கிருமி நாசினிகள் இருப்பதனாலேயே கண்கள் எப்போதும் தூய்மையாக இருக்கின்றன..

செல்விகதர்சிகா
"ரூத்"
மிஷன் - கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதை

1. இனிப்புப் பொட்டலத்திற்கு எட்டாயிரம் காவலாளிகள் அது என்ன..

2. இரவல் கிடைக்காதது இரவில் கிடைப்பது அது என்ன..

3. இருட்டு வந்தால் கூட்டம் பகலென்றால் ஓட்டம் அது என்ன..

4. அலறிக் கூப்பிடுவான் அறுந்தால் அடங்கி விடுவான் அவன் யார்..

5. இருந்த இடத்தில் இருந்தபடியே ஆட்டம் இதில் சிலருக்குத் திண்டாட்டம் சிலருக்குக் கொண்டாட்டம் அது என்ன..

6. இரவு பகல் விழித்திருக்கும் எப்போதும் ஒலித்துக்கொண்டு மறைந்திருக்கும் அது என்ன..

7. இரண்டு தோட்டம் நாலு வேலி வெள்ளை கறுப்புப் பூந்தோட்டம் அது என்ன..

விடைகள்:- (1) தேன்கூடு (2) நித்திரை (3) நட்சத்திரம் (4) தொலைபேசி
(5) சீட்டாட்டம் (6) இதயம் (7) கண்

தொகுப்புதிருமதிஜெயாநடேசன்
ஜேர்மனி.

நன்றிகள்!.

மண் சஞ்சிகையின் அட்டைப்பட கணனி வடிவமைப்பு
செல்வன்.பானுஸ்கந்தா. புவனேந்திரன்.

மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு
செல்வன்.சிவகாந்த்.சிவராசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

1. கண்டம் விட்டுக் கண்டம் பாய்வான், நெருப்பைக் கக்கியபடி பாய்ந்து செல்வான் அவன் யார்..

2. ஓட்டைகள் இல்லாத கட்டில், ஆனால் எந்தப் பக்கமும் நகர்த்த முமயாது இது என்ன..

3. எழுதி எழுதியே தேய்ந்து போனான், பல வர்ணங்களிலும் இருப்பான் அவன் யார்..

4. வட்டமாக இருப்பான், கழிவுப் பொருள் என்றும் சொல்வர், நெருப்பு எரியவும் உதவுவான் அது என்ன..

5. பத்தில் ஒருவன் சிறுவன், பலதும் செய்திட உதவிடுவான் இவன் யார்..

6. அவசரத்திற்கு உதவுவான், அதிவேகமாகச் செல்வான், இவனைக் கண்டால் விலகிநிற்பர் அது என்ன..

7. அரிவாளால் வெட்டி அடுப்பில் வைத்தாலும் மூச்சே விடமாட்டான் அவன் யார்..

8. நின்ற இடத்தில் சுழல்வான், பாதுகாப்பானவன், ஆனால் நடக்கமாட்டான் அவன் யார்..

பதில்கள்:-

(1) ரொக்கட் (2) திண்ணை (3) வெண்கட்டி (சோக்கட்டி) (4) வரட்டி
(5) குட்டிவிரல் (6) அம்புலன்ஸ் வண்டி (7) விறகு (8) கதவு

செல்வி.கயுகேந்திரினி
"ரீந்"
மிஷன் - கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மொழி.

மொழி செம்மொழியாக்கப்படவேண்டுமானால் பன்னிரு அம்சங்களில் அது தகுதியுடையதாக இருக்க வேண்டும். இவை அனைத்துச் சிறப்புக்களும் தமிழ்மொழிக்கு உண்டு.

1. தொன்மை
2. தனித்தன்மை
3. பொதுமைப்பண்பு
4. நடுநிலைமை
5. தாய்மைத்தன்மை
6. கலை
7. பண்பாடு
8. பட்டறிவு
9. பிறமொழித்தாக்கமின்மை
10. இலக்கியவளம்
11. உயர்சிந்தனை
12. மொழியியல்கோட்பாடுகள்

## பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு.

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு என்பது பெறுதற்கரியபெரும்பயன்களைக் குறிக்கின்றது. பதினாறு பெறுபேறுகளைக் குறிக்கின்றது. இவையே தமிழர்களால் உயர்ந்த பண்பாகப் போற்றிக் கருதி வாழ்துவந்தவையாகும்..

1. அறிவு
2. அழகு
3. ஆற்றல்
4. ஒழுக்கம்
5. பண்பு
6. இளமை
7. துணிவு
8. வெற்றி
9. புகழ்
10. பொன்
11. நெல்
12. நல்வினை
13. நுகர்ச்சி
14. நன்மைகள்
15. நோயின்மை
16. நீண்டஆயுள்

திருமதிஇராஜேஸ்வரி.
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலை மாசடையாது பாதுகாப்போம்!.

அண்மைக் காலங்களாக இயற்கைச் சமநிலை பற்றியும், சுற்றுப்புறச் சூழலைப்பற்றியும் அவை பொருளாதார அபிவிருத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்று உலகில் கவலைதரும் விடயங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக திகழ்வது சூழல்ப்பிரச்சனையே. உயிரினங்கள் உலகில் வாழ்வதற்குத் தேவையானவற்றைச் சூழலில் உள்ள சடத்துவக்கூறுகளே வழங்குகின்றன. இவ்வாறு ஒன்றுக்கொன்று உதவும்போது சூழலின் சமநிலை பேணப்பட்டது. விரைவான சனத்தொகை வளர்ச்சி, முன்னேற்றம் அடைந்துவரும் தொழில் நுட்பங்கள், விருத்தியடைந்துவரும் போக்குவரத்து வசதிகள், கைத்தொழில் உற்பத்தி செயன்முறைகள், தொலைபேசி உள்ளிட்ட கணனி தொழில்நுட்ப தொடர்பாடல் வசதிகள்,இரசாயன உற்பத்திப் பொருட்களின் பாவனைகளது அதிகரிப்பு போன்றவை சூழலில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்திவரும் செயற்பாடுகளாகும்.

மனிதனின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட சூழலை மனிதனே மாசடையச் செய்யும் துரதிஷ்ட நிலையே இன்று காணப்படுகின்றது.. தேவைகளின் பெருக்கம் காரணமாக மனிதன் தன் தேவைகளை நிறைவேற்ற சூழலைச்சுரண்டி சூழலில் வரையறையற்ற தாக்கங்களை ஏற்படுத்தியதன் விளைவாக சூழல் மாசடைதல் என்பது சர்வதேச ரீதியான பிரச்சனையாகவே உருவெடுத்துள்ளது. எனவே உலகளாவிய ரீதியில் சூழல் மாசடையாது பாதுகாக்கப் பல்வேறு கோட்பாடுகள் தேசிய ரீதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மனிதன் தனித்து வாழமுடியாது. உணவு, வாழிடம், பாதுகாப்பு, இடப்பெயர்ச்சி, இனப்பெருக்கம் போன்ற சூழலில் இருந்தேபெறப்படுகின்றன. சூழல் தொகுதிகள் ஒன்றோடொன்று இணைந்து காணப்படுகின்றன. இச்சூழல் தொகுதியின் சமநிலையை குழப்பும் காரணிகளில் மனிதனே முதல் இடம் வகிக்கின்றான். குடியிருப்புக்களை அமைத்தல், விவசாய உற்பத்திகளில் பெருக்கம், போக்குவரத்து விருத்தி ஆகியவற்றின் காரணமாக காடுகள் அழிக்கப்படுகின்றன. இயற்கைக்கு முரணான இச்செயற்பாட்டினால் காலநிலையில் மாற்றம் ஏற்படுதல், மண்சரிவு ஏற்படல், விலங்குகளுக்கு வாழிடம் அற்றுப்போதல், மழைவீழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவடைதல் போன்ற அசௌகரியமான சூழ்நிலைகள் ஏற்படும். சூழல் சமநிலையைப்பேண உள்நாட்டு மட்டத்திலும் சர்வதேசமட்டத்திலும் சூழல் தொடர்பான சட்ட விதிகளை அமைத்தல் வேண்டும். தற்போது பல நிறுவனங்கள் இயற்கைச்சூழலில் ஏற்படும் தாக்கங்களை குறைக்கும் வகையில் தமது உற்பத்திச் செய்முறைகளில் பல்வேறு மாற்றங்களைப் புகுத்தி வருகின்றன. எனவே சூழல் என்ற எண்ணக்கருவுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் உற்பத்தி நடவடிக்கைகள் அமையுமாயின் அது சூழல் சமநிலையைப்பேணி சூழல் மாசடையாது பாதுகாக்க பெரிதும் உதவும்.

சூழலை மாசுபடுத்தும் செயற்பாட்டில் நவீன தொழில்நுட்ப சாதனங்கள் பெருமளவில் பங்காற்றுகின்றன. நவீனதொழில்நுட்ப இயந்திரங்களிலிருந்து வெளிவருகின்ற புகை மற்றும் கழிவுப்பதார்த்தங்கள் பொருட்கள் நீருடன் கலப்பதால் நீர் மாசடைவதுடன் நீரில்வாழும் உயிரினங்களும் பாதிக்கப்படுகின்றன. இதனால் மனிதருக்குப் பல நோய்களும் ஏற்படுகின்றன. இதுமட்டுமல்லாமல் விமானம் மற்றும்வாகனங்களிலிருந்து வெளிவரும் புகைமண்டலத்தாலும் பூமியின் ஓசோன் படலம் பல பாதிப்புக்களை எதிர்கொண்டு சூரியனிலிருந்து வெளிவரும் கழியூதாக்கதிர்கள் பூமியை வந்தடைந்து புற்றுநோய், தோல்நோய் போன்ற பல நோய்கள் தோற்றுவிக்கின்றன.

இயற்கைச் சமநிலையை பேணுவதில் தாவரங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இலை, மரம், செடி, கொடி போன்றவை சூழலுக்கு அழகையும் சுவாசிப்பதற்கு ஏற்ற சுத்தமான வாயுக்களையும் தருகின்றன. இதுமட்டுமன்றி தளபாடம் செய்வதற்கும் அரிமரப் பயன்பாட்டிற்கும் முக்கிய பங்காற்றுகின்றன. இவ்வாறு பயனுடைய தாவரங்களை மனிதன் தன் சுயதேவை கருதி அவற்றை அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளான். இதனால் சூழல் இன்று பெரும் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிரூட்டிகளின் பாவனைகள், அணுப்பரிசோதனைகள்,, தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகள், நிலத்தை அளவுக்கு அதிகமாகத் தோண்டுதல், வானுயர்ந்த கட்டிடங்களைக் கட்டுதல் போன்ற பல காரணங்களாலும் சூழல் மாசடைகின்றது. இதனால் அதிகமழை பெய்தல், கடும் வறட்சி நிலவுதல், ஓசோன் மண்டலம் பாதிக்கப்படுதல் போன்ற தீய விளைவுகள் ஏற்படுகின்றன. இவை காலநிலை மாற்றங்கள் ஏற்படவும் மனித உடல்நலம் பாதிக்கப்படவும் காரணமாக அமைகின்றன.

எனவே இதனைக் கட்டுப்படுத்த தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் பாகங்கள் வளிமண்டலத்தை அடையாது தடுத்தல், எரிபொருள் பாவனையின்போது உருவாகும் மாசுக்களை அகற்றுதல், எரிபொருட்களுக்குப் பதிலாக இயற்கைவாயு, சூரியசக்தி போன்றவற்றைப் பயன்படுத்துதல், சூழல் சம்பந்தமான இறுக்கமான சட்டங்களை அமுல்படுத்தல், சர்வதேச ஒத்துழைப்புடன் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்தல், குளிரூட்டிகளின் செய்பாடுகளை மட்டுப்படுத்திக் கட்டுப்படுத்துதல் இன்று அவசியமான காரியமாகும்.

இவற்றை நடைமுறைப்படுத்துவதில் பல இடையூறுகள் காணப்படினும் படிப்படியாக மாற்றங்களை ஏற்படுத்திப் பூமியை மாசுபடாமல் பாதுகாப்பது நமது இன்றைய முக்கிய கடமையாகின்றது.எனவே மனிதர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளை கைவிட்டு நாம் வாழும் சூழலில் அழகு தாவரங்களை நாட்டி, சூழல் சட்ட திட்டங்களுக்கு மதிப்பளித்து, வருங்காலச் சந்ததியினர் பயன்படும் வகையில் சூழலை மாசுபடுத்தாது அனைவரும் ஒன்றிணைந்து நம் பூமி மாதாவைப் பாதுகாப்போம்!..

செல்வன்விபிரதீபன்
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி
அருளகம்
வவுனியா

பொய்:-

-பொய் பேசுதல் வாழவிடாது உண்மை சாகவிடாது..
-பொய் என்பது தற்காலிகமானது உண்மை நிரந்தரமானது..
-பொய் சொல்லித் தப்பிக்காதே உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடைப் போட்டி முடிவு – 156 (வைகாசி – ஆனி – 2014)

1. இலங்கையின் மிகஉயர்ந்த மலையின் பெயர் என்ன..
   பேருதுதாலகாமலை - உயரம் 2.685 மீட்டர்
   இலங்கையின் மிகநீளமான நதியின் பெயர் என்ன..
   மகாவலிகங்கை - நீளம் 333 கிலோமீட்டர்

2. இலங்கையில் வெளியாகும் நான்கு தமிழ் தினசரிப் பத்திரிகைகளின் பெயர்களை எழுதுக..

   வீரகேசரி, தினகரன், உதயன், சுடரொளி

3. வடகிழக்கு மாகாணத்தில் இஸ்லாமியர்கள் அதிகமாக வாழும் நான்கு இடங்களின் பெயர்களைக் குறிப்பிடுக..

   காத்தான்குடி, பொத்துவில், அக்கரைப்பற்று, மன்னார்

4. கடந்த 7-03-2014 அன்று 239 பயணிகளுடன் விமானம் ஒன்று காணாமல்போனதாக அறியப்பட்டது. இந்தவிமானம் எந்தநாட்டுக்குரியது.

   இந்த நாட்டின் தலைநகரம் எது..
   மலேசியா - கோலாலம்பூர்

5. பின்வரும் நாடுகளில் காணப்படும் உலக அதியங்களின் பெயர்களைக் குறிப்பிடுக..

   சீனா - சீனப்பெரும்சுவர் இந்தியா - தாஹ்மகால்
   பிரான்ஸ் - ஈபிள்கோபுரம் இத்தாலி - சாய்ந்தகோபுரம்

6. உங்களுக்குத்தெரிந்த நான்கு இணைமொழிகளை எழுதுக..
   உதாரணம்:- கணக்குவழக்கு.

   கண்ணும்கருத்தும் கள்ளங்கபடம்
   பழக்கவழக்கம் தன்னந்தனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடைப் போட்டி - 157 (ஆடி-ஆவணி-2014)

1. இலங்கையில் வாழ்ந்துகொண்டிருக்கும் மதப்பிரிவினரின் பெயர்களை எழுதுக..

---------------- -------------- ------------- -----------

2. வடகிழக்கு மகாகணத்திலுள்ள கடற்கரையோரங்களில் அமைந்துள்ள எட்டு ஊர்களின் பெயர்களை எழுதுக..

------------ ------------ ------------- ------------

------------ ------------ ------------- -------------

3. இலங்கையில் புகழ்பெற்ற வெந்நீர் ஊற்றுக்கள் எந்த இடத்தில் அமைந்துள்ளது. இது எந்த மாவட்டத்தில் அமைத்துள்ளது.

------------------ ------------------

4. கடந்த 13-07-2014 அன்று நடந்து முடிந்த உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற நாட்டின் பெயர் என்ன. இது எந்தக்கண்டத்தில் அமைந்துள்ளது. இந்த நாட்டின் தலைநகரம் எது.

------------------ ---------------- -----------------

5. பிரித்தெழுதுதல்...... சேர்த்தெழுதுதல்........

| பிரித்தெழுதுதல் | | சேர்த்தெழுதுதல் | |
|---|---|---|---|
| காற்றோட்டம் | --------------- | நாள் + காட்டி | ------------- |
| தரைவிரிப்பு | -------------- | சமையல் + அறை | ------------- |
| பழச்சாறு | -------------- | வெள்ளி + கிழமை | ------------ |
| கடற்காற்று | -------------- | நிலம் + சரிவு | ------------ |
| மரக்கிளை | -------------- | வாசல் + படி | ------------ |

6. ஒரு பொருள் பல சொற்கள் எழுதுக..

உதாரணம்:- அம்மா - தாய் - மாதா - அன்னை

| | | | |
|---|---|---|---|
| அப்பா | ----------- | ------------- | ----------- |
| கடவுள் | ----------- | ------------- | ----------- |
| சூரியன் | ----------- | ------------- | ----------- |
| அரசன் | ----------- | ------------- | ------------ |

7-நீங்கள் விரும்பிய திருக்குறள் ஒன்றையும் அதன் பொருளையும் எழுதுக

முடிவு திகதி: 30082014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி -82

(வைகாசி - ஆனி - 2014)

| | | | |
|---|---|---|---|
| சு | ந் | று | ளா |
| த் | று | ந் | ப |
| த | ல் | கா | க |
| ம் | ர | பா | ல் |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 83

(ஆடி - ஆவணி 2014)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ:-

01-03 உலகின் முதல் தெய்வம்.

10-11 வேடனின் கையிலுள்ளது.

வ-இ:-

04-03 குடும்பத்தில் ஒருவர்

12-10 இளமையில் இதை ஒழுங்காகப் பயிலவேண்டும்.

15-14 மனம் என்றும் கூறலாம்

கீ-மே:-

14-06 சில மாணவர் இது எழதுவதில் வல்லவர்கள்.

15-07 தாமரை இனங்களில் ஒன்று.

மே-கீ:-

01-13 இனிப்பான உணவு.

04-16 முக்களிகளில் ஒன்று ஒத்தசொல்லாக வந்துள்ளது.

முடிவு திகதி: 30082014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் போட்டி முடிவுகள்

பங்குகொண்டவர்களும் பரிசு பெறுபவர்களும்.

செல்வி. நந்தனா.கனகராசா - Monchengladbach
செல்வி. சாதனா.தேவானந்தராசா - Monchebgladbach
செல்வி. துசயந்தி.முருகானந்தம் - Kilinochchi
செல்வி. மு.நிசா - Kilinochchi
செல்வி. நிலானி.அழகராசா - Berlin

செல்வன். காந்தன்.கந்தசாமி - Frankfurt
செல்வன். தினேஷ்.செல்வகுமார் - Swiss
செல்வன். பிருந்தாபன். சிவமூர்த்தி - Netherland
செல்வன். ராகுல்.கனகராசா - Monchengladbach
செல்வன். பவிதன்.அருமைத்துரை - Wiesloch
செல்வன். ஆதவன்.அருமைத்துரை - Wiesloch

பரிசுபெறும் அதிஸ்டசாலிகள்...

செல்வி. துசயந்தி முருகானந்தம் - Kilinochchi
செல்வி. நிலானி அழகராசா - Berlin
செல்வன். தினேஷ் செல்வகுமார் - Swiss

போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்து மாணவ மணிகளுக்கும் பாராட்டுக்களும்..வாழ்த்துக்களும்!..தொடர்ச்சியாக போட்டிகளில் பங்குகொள்ளுங்கள்!... பரிசுகளை வென்றிடுங்கள்!..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராணங்களை இயற்றியவர்கள்

இங்கு சில புராணங்களும் அவற்றை இயற்றியவர்களின் பெயர்களும் கொண்ட பட்டியல் இது.

1. இலிங்க புராணம் - வரகுண ராம பாண்டியர்
2. கூர்ம புராணம் - அதிவீர ராம பாண்டியர்
3. வினாவிடை புராணம் - புராணத் திருமலைநாதர்
4. தசபுராணம் - அப்பர்
5. சிவபுராணம் - மாணிக்கவாசகர்
6. அருணகிரி புராணம் - புராணத் திருமலைநாதர்
7. அருணகிரி புராணம் - மறைஞான சம்பந்தர்
8. அருணாசல புராணம் - சைவ எல்லப்ப நாவலர்
9. இறைசை புராணம் - புராணத் திருமலைநாதர்
10. சிதம்பர புராணம் - புராணத் திருமலைநாதர்
11. சுந்தரபாண்டிய புராணம் - அனதாரி
12. செவ்வந்தி புராணம் - சைவ எல்லப்ப நாவலர்
13. சேது புராணம் - நிரம்ப அழகிய தேசிகர்
14. திருக்காளத்திப் புராணம் - ஆனந்தக் கூத்தர்
15. திருச்செங்காட்டங்குடி புராணம் - சைவ எல்லப்ப நாவலர்
16. திருப்பட்டீசுரம் புராணம் - ரேவண சித்தர்
17. திருப்பரங்கிரிப் புராணம் - நிரம்ப அழகிய தேசிகர்
8. திருமழபாடி புராணம் - கமலை ஞானப் பிரகாசர்
19. திருமேற்றளி புராணம் - ரேவண சித்தர்
20. திருவலஞ்சுழி புராணம் - ரேவண சித்தர்
21. திருவாரூர்ப் புராணம் - அளகை சம்பந்த முனிவர்
22. திருவானைக்காப் புராணம் - கமலை ஞானப்பிரகாசர்
23. திருவிரிஞ்சைப் புராணம் - சைவ எல்லப்ப நாவலர்
24. திருவெண்காடு புராணம் - சைவ எல்லப்ப நாவலர்
25. திருவெற்றியூர்ப் புராணம் - திருவெற்றியூர் ஞானப்பிரகாசர்
26. திருவையாறு புராணம் - ஞானக்கூத்தர்
27. திருவையாறு புராணம் - நிரம்ப அழகிய தேசிகர்
28. தீர்த்தகிரி புராணம் - சைவ எல்லப்ப நாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. வேணுவனம் புராணம் - நிரம்ப அழகிய தேசிகர்
30. கமலாலயப் புராணம் - மறைஞான சம்பந்தர்
31. சரப புராணம் - புராணத் திருமலைநாதர்
32. சைவமகா புராணம் - புராணத் திருமலைநாதர்
33. ததீசி புராணம் - புராணத் திருமலைநாதர்
34. திருத்தொண்டர் புராணம் - சேக்கிழார்
35. திருவிளையாடல் புராணம் - பெரும்பற்றப்புலியூர் நம்பி
36. திருமுறை கண்ட புராணம் - உமாபதி சிவம்
37. சேக்கிழார் புராணம் - உமாபதி சிவம்
38. கோயிற்புராணம் - உமாபதி சிவம்
39. மேருமந்தர புராணம் - சமய திவாகர வாமன முனிவர்
40. திருவாதவூர் அடிகள் புராணம் - கடவுள் மாமுனிவர்
41. விநாயக புராணம் - கச்சியப்ப முனிவர்
42. காஞ்சி புராணம் - சிவஞான முனிவர்
43. தேவயானைப் புராணம் - நல்லாப் பிள்ளை
44. அருணாச்சலப் புராணம் - சிவப்பிரகாச சுவாமிகள்
45. தணிகைப் புராணம் - கச்சியப்ப முனிவர்
46. சீறாப் புராணம் - உமறுப் புலவர்
47. அரிச்சந்திர புராணம் - வீரகவிராயர்
48. பெரிய புராணம் - சேக்கிழார்
49. புலவர் புராணம் - தண்டபாணி சுவாமிகள்
50. திருக்கழுக்குன்றப் புராணம் - அந்தகக் கவி வீரராகவ முதலியார்

எழுத்தாளர்கள் ஆகாயத்தில் கோட்டை கட்டுகிறார்கள். வாசகர்கள் அந்தக் கோட்டையில் குடியிருக்கிறார்கள்.. அதற்கான வாடகையை புத்தக வெளியீட்டாளர்கள் வசூலிக்கிறார்கள்"

மார்க்ஸிம் கார்க்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மையின் பெருமைகூறும் பழமொழிகள்

மந்திரங்களிலே உயர்ந்த மந்திரமாகக் காயத்திரி மந்திரத்தை மக்கள் போற்றுவதைக் காண்கிறோம். அதைப்போல் உறவுகளிலும் முக்கிய உறவாகத் தாய் போற்றப்படுகின்றாள்.

"தாயைப்போல் உறவு இல்லை காயத்திரிபோல் மந்திரமில்லை" என்பது ஒரு பழமொழியாகும்.

நாட்டு மருத்துவத்தில் சுக்குக்கு இருக்கும் மகத்துவம்போல் வீட்டு உறவுகளில் தாய்க்கு இருக்கும் மகத்துவம் சிறப்பானது. "தாய்க்கு மிஞ்சிய உறவுமில்லை சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை" என்பது இன்னொரு பழமொழியாகும்.

தாய்ச்சொல் கேளாமல் வாழ்ந்தபடியால் பல பிள்ளைகள் வாழ்வு சீரழிந்த சம்பவங்களும் உண்டல்லவா. இதற்காகத்தான் "தாய்ச்சொல் கேளாப்பிள்ளை தறுதலை" என்று பழமொழி உண்டு.

தாயின் சொல்கேட்டு வாழ்ந்தால் வாழ்வில் நிம்மதி கிடைக்கும். நல்வாழ்வு வாழலாம் இதற்காகத்தான் "தாய்ச் சொல் துறந்தால் வாசமில்லை" என்று பழமொழி உண்டு.

"தேரோடு போச்சுது திருநாள் தாயோடு போச்சுது பிறந்தவீடு" என்பன தாய்மையின் பெருமையைக்கூறும் பழமொழிகளாகும்.

இப்படியாகத் தாய்மையைப் போற்றும் பழமொழிகள் தமிழில் ஆயிரம் உண்டு. உயிரின் பிறப்பிடம் தாயாவள். தாய் இல்லையேல் உயிர்களே இல்லை. எனவே நம்மைப்பெற்ற தெய்வத்தை வாழ்நாளில் போற்றி வணங்குதல் எமது கடமையாகும். எப்போதும் வணங்குவோம் வாழ்த்துவோம்!..

திருமதி. இராஜேஸ்வரி
ஜோமனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான வேண்டுகோள்!.

மண்சஞ்சசிகையில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் சிறுவர் போட்டிகளான குறுக்கெழுத்துப்போட்டி, வினாவிடைப் போட்டி, கண்டுபிடியுங்கள் போட்டிகளில் பங்குபற்றும்மாணவர்களின் எண்ணிக்கைகுறைவடைந்துவருவதை வேதனையுடன்சுட்டிக்காட்டுகின்றோம் .மாணவமணிகளின்தாய்மொழிக் கல்வி,எழுத்தாற்றல், சிந்தனையாற்றல், அறிவியல் விடையங்களில் மேம்படவேண்டும் என மண்சஞ்சிகை பல ஆண்டுகளாக எடுத்துவரும் செயற்பாடுகளுக்குநீங்கள் கொடுத்துவரும் ஒத்துழைப்புக்கள் ஆதரவுகள் குறைவடைந்துவருவதால் இந்த மூன்று போட்டிகளையும் தொடர்ந்து நடத்துவதா!..என்னும்கேள்வி எழுந்துள்ளது. பங்குகொள்ளும மாணவமணிகளின எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால் போட்டிகளை நிறுத்தவேண்டிய காலகட்டத்தில் உள்ளோம். எனவே அடுத்துவரும காலங்களில் போட்டிகளில்கலந்துகொள்ளும மாணவ மணிகளின் எண்ணிக்கை குறித்து முடிவெடுக்கப்படும்.ஆகவே பெற்றோர்களும் மாணவர்களும் ஆக்கமும் ஊக்கமும் எடுத்து ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிப் பயன்படும்வண்ணம் அன்போடு கேட்டுகொள்கின்றோம்!..

ஆசிரியர்

## வெள்ளி விழா!. (25வது ஆண்டுவிழா)

உங்கள் மண் சஞ்சிகை எதிர்வரும் 2015 தை மாதம் தனது 25வது ஆண்டை நிறைவுசெய்து வெள்ளிவிழாவைக் கொண்டாடவுள்ளது.வெள்ளி விழாவையொட்டி சிறுவர் இளையோர், வாசகர்களிடையே பல வகையான போட்டிகளை நடாத்தவுள்ளது. ஆகவே தொடர்ந்து மண் சஞ்சிகையைப் படியுங்கள். இவ்விழா பற்றிய உங்கள் கருத்துக்களை அன்போடு எதிர்பார்க்கிறோம்!...

வெள்ளிவிழா.. வாசகர், இளையோர், சிறுவர்கள் போட்டிகள் பற்றிய விபரங்கள் எமது அடுத்த இதழில் ஆவலுடன் எதிர்பாருங்கள்!...

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

**செய்ந்நன்றியறிதல்:-**

101. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிதுஇ

102. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதேனும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

103. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

105. உதவி வரைந்தன் றுதவி உதவி
செய்யப்பட்டார் சால்பின் வரைத்து

106. மறவற்க மாசற்றார் கேணஇமை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

107. எழமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழமம் துடைத்தவர் நட்பு.

108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

109. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

110. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

பிறர் செய்த உதவியை மறவாமை: –

101. பிறருக்கு ஓர் உதவியும் செய்யாதிருக்கத் தக்க சமயத்தில் ஒருவர் (நமக்குச்) செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் ஈடாகா.

102. ஒருவருக்கு உதவி வேண்டிய காலத்தில் தப்பாமல் செய்த உதவி மிகச் சிறியதாக இருந்தாலும் அவ்வுதவி உலகைவிடப் பெரியதாகும்.

103. இவருக்கு இவ்வுதவி செய்தால் நமக்கு இன்ன பயன் கிடைக்கும் என்று கருதாமல் ஒருவர் மற்றவருக்குச் செய்த உதவியானது கடலைவிடப் பெரியதாகும்.

104. ஒருவன் தனக்குத் தினையத்தனை உதவியைச் செய்தாலும் அவ்வுதவியின் பயனைத் தெரிந்தவர் அதைப்பனையளவாகக் கொள்வர்.

105. ஒருவருக்கு மற்றவருக்குச் செய்யும் உபகாரம் அளவுடையதல்ல. அவ்வுபகாரம் உதவி செய்தவரின் தகுதியின் அளவினதாகும்.

106. குற்றமற்ற நற்குணமுடையவரின் நட்பை மறந்து விடக்கூடாது. துன்பக்காலத்தில் உதவி செய்தவரின் நட்பை விட்டுவிடக்கூடாது.

107. தனக்குண்டான துன்பத்தை நீக்கியவர் நட்பினை ஏழேழ பிறவியிலும் நினைப்பர் சான்றோர்.

108. ஒருவர் செய்த உதவியை மறப்பது நல்லதல்ல. பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது

109. ஒருவர் சொல்லும்படியான கெடுதலைச் செய்தாலும் அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைக்க அத்தீமை மறைந்து போகும்.

110. எத்தகைய உதவியை அழித்தவருக்கும் அப்பாவத்திலிருந்து நீங்கும் வழியுண்டு. ஒருவர் செய்த உதவியைச் சிதைத்தவருக்கு அப்பாவத்திலிருந்து நீங்கும் வழியே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடாமுயற்சியும் மன வலிமையும்

விடாமுயற்சி என்பது ஒருவர் தொடங்கிய தொழில் முற்றுப்பெற அல்லது வெற்றிகொள்ள எடுத்த முயற்சியை இடையிலே நிறுத்திவிடாமல் தொடர்ந்து செய்வதாகும். வாழ்க்கையில் முன்னேறும் எண்ணமுடையவர் இத்தகைய முயற்சியாளராக இருக்கவேண்டும்."துன்பம் உறவறினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை" எனக்கூறுகின்றார் வள்ளுவப் பெருந்தகை. "எதனையும் நான் திடும் என்று கண்டுபிடிக்கவில்லை. பல்லாண்டுகள் ஊன், உறக்கமின்றி உழைக்க உதவி செய்தது எனது விடாமுயற்சிதான்" எனக்கூறுகின்றார் விஞ்ஞானி அல்வா எடிசன். "ஒரு முறை தொடங்கப்பட்ட ஒரு செயல் வெல்லப்படாதவரை விடப்படவே கூடாது அதுவே விடா முயற்சி" எனக்கூறுகின்றார் ஷேக்ஸ்பியர். விடாமுயற்சியோடு அறிவுடன் இருந்து செயற்பட்டவனது வாழ்வில் செல்வம் பெருகும்" எனக்கூறுகின்றார் ஒரு அறிஞர்.

இவ்வாறு பெரியோர்களின் அனுபவங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கு விடாமுயற்சி தேவை என்பதை வலியுறுத்துகின்றன. ஒரு தொழிலில் வெற்றிபெறவேண்டுமானால் அதற்கு முயற்சி தேவை என்பதை "முயற்சி திருவினையாகும்" என்றும் வள்ளுவர் நமக்கு உணர்த்துகின்றார். தொழில் மன வலிமையுடன் தொடங்கப்பட்டால் முயற்சியின் பலனை நன்கு அடையலாம். செய் தொழிலால் உயர்வடைந்து புகழ்பெறுவதும் அல்லது தாழ்வடைந்து இகழ்ச்சியுறுவதும் தொழிலைத் தொடங்கியவரின் விடாமுயற்சியைப் பொறுத்தது என்பதனை "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் பழமொழி நமக்கு விளக்குகின்றது. விடாமுயற்சியுடையோரிடம் ஒரு போதும் சோம்பல் தோன்றாது. உழைப்பே அவரது முயற்சியாகையில் அவர் தோல்வியைக் கண்டு அஞ்சமாட்டார். தோல்வியே வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அடிப்படை என்பதை உணர்வார்.

ஒருவரது எண்ணங்களும் முயற்சியும் தன்னம்பிக்கையும் ஒன்று கூடும்போது வெற்றியும் இலகுவாகிவிடும். தன்னிடமுள்ள வசதி, வாய்ப்பு, திறமை, பொருள், கருவி, காலம், இடம் முதலியவற்றிற்குத் தகுந்தாற்போல தொழிலையும் தேர்ந்தெடுக்க வேண்டும். அது மட்டு மல்லாமல் பெரியோரின் அனுபவசாலிகளின் ஆலோசனைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது பெற்றுக்கொள்வதும் அவசியமாகும். அவர்களின் கருத்துக்களையும் தமது எண்ணங்களையும் அறிவாற்றல்களையும் பயன்படுத்தித் திட்டங்களைச் செயற்படுத்தினால் நல்ல பயன் கிடைத்துவிடும்.. ஆகவே எத்தனை தடைகள் வந்தாலும் மனம் தளராது மனம் சோராது தடைகளை உடைத்து மனவலிமைகொண்டு முயற்சித்தால் எத்தகைய காரியங்களையும் செய்துவிடலாம். தொழில் செய்வதில் பொறுமையும் மிக முக்கியமான ஒன்றாகும். மனவலிமையும் பொறுமையும் அமையப்பெற்றிருந்தால் தடைகள் இடையூறுகளைக் கண்டு நிலைகுலையாது அவற்றை எதிர்கொண்டு முயற்சியும் மனவலிமையும் ஒன்று சேர்ந்து காரிமாற்றும் பொழுது வாழ்வில் வெற்றியும் முன்னேற்றமும் கிடைத்துவிடும்!...

சிவா
ஜேர்மனி

## சிந்தனைகள்.

அறிவை வளர்த்துக்கொள்ள நல்ல நூல்களைத் தேடிப்படி. அறியாமை என்னும் இருள் அகலும்..

மனிதவாழ்வில் குறிக்கோள் வேண்டும். இல்லையாயின் தண்ணீரில் தத்தளிப்பது போல் ஆகிவிடும்..

கடின உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை என்பவற்றால் அடையும் பயன் வெற்றியைத்தரும் என்பது உண்மையாகும்.

இனிமையான பேச்சில் இன்பம் காணலாம். அதனை அளவோடு பேசு, தெரியாதவற்றைத் தெரியும் என்று பேசாதே: அலசி ஆராய்ந்து பேசு. நிறைவான மதிப்புக் கிடைக்கும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் தன்னம்பிக்கை ஏன் ஏற்படவேண்டும்

ஒவ்வொரு மனித வாழ்வும் தன்னம்பிக்கையின் துளிர்ப்பிலே மலர்கிறது. தன்னம்பிக்கை சுயமான ஆற்றலை அறுவடை செய்ய தூண்டியாக அமைகிறது. இந்த வகையில் துடுப்புகளின் பலமான தன்னம்பிக்கை ஒவ்வொரு மனிதனிடமும் அவசியம் தேவையாகிறது. ஆற்றல் என்பது ஊற்றுப்போல அமைய அதனை செயலுருவமாக்க தன்னம்பிக்கை பயன்படுகிறது.சின்னவயது முதலே குழந்தைகளை தன்னம்பிக்கையுடன் வளர்க்க வேண்டும். துணிவு பயமின்மை போன்றவை மனதில் உருவாக நம்பிக்கை பதியமாக சுடர்விடுகிறது. சுயமான ஆற்றல் படைத்திட, தூண்டுகோலாய் அமைவதும் இதுதான்..

படைப்பும் செயலும்உடைப்பெடுத்து உருவாக வேண்டும். வாழ்வு முயற்சியின் நகர்விலே தங்கியுள்ளது. முயற்சியின் படிகற்கள் உயர வேண்டுமாயின் உயர்ச்சியின் விழிம்பிலே தன்னம்பிக்கை தளராமல் பாடுபட உதவுகிறது. யானையின் பலம் தும்பிக்கையிலே மனிதனின் பலம் தன்னம்பிக்கையிலே என்பர். சுயமான முயற்சிகள் அறுவடையாக துணிவான செயல்களில் கால்பதிக்க வேண்டியதாகிறது. எந்த ஒரு விடயத்தையும் ஆற்றுவதற்கு மனமாகிய துணிவு பாதையை இலகுவாக்குகிறது .தளராத தன்னம்பிக்கை சுலபமான விடயங்களை சுதந்திரமாக செய்ய முடிகிறது. முடியும் என்ற முனைப்பு உருவாக வெற்றியை நோக்கி நகர்வுகள் சாத்தியமாகிறது. சாதனை சிகரங்களைத் தொட கடினப்பாதைகளையும் சுலபமாக்கிறது தன்னம்பிக்கை. இன்றைய அறிவியல் உலகில் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளைகளும் எதிர்காலத்தில் சிறந்தவர்களாக வல்லமை உடையவர்களாக உருவாக தன்னம்பிக்கை தேவைப்படுகிறது.

வாழ்க்கை முட்கள் நிறைந்த புதர்கள்தான். அதன் கடினங்களை இலகுவாக்கி முன்னேற முதுகெலும்பாக உதவுவது நம்பிக்கை.ஒவ்வொரு நம்பிக்கையின் உதயம்தான் வாழ்வை விடிவெள்ளியாக்கும். எம் வாழ்வு எனும் வலைப்பின்னல் சிக்கலை வளமாக உடைத்து முன்னேற்ற ஏணியாக பயன்படுவது நம்பிக்கைப் பதியம்தான். அறிவியலின் ஆழம் அதனை செயலுருவாக்கி செழிப்பான கருவைப் பிறப்பிக்க நம்பிக்கையெனும் முளையம் தேவையாகிறது. இதுவே அச்சத்தைஅகற்றி அனைத்தையும் வளர்க்கும். . எதனையும் பயமென எண்ணாது எண்ணித் துணிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் என்ற சக்தியால்தான் உலகமே நகர்கிறது. எதற்கும் பயந்து கோழையாக வாழ்ந்தால் வாழ்வில் முன்னேற முடிமா? . பலமான சக்தியை மனங்களில் பதிக்க இறை நம்பிக்கை கூட இதமான தேவைப் படுகிறது. ஏழ முறை பின்னிய சிலந்தி கூட நம்பிக்கையுடன் முயன்றதாலே வெற்றி சாத்தியமானது. அதுபோலத்தான் தோல்வி கிடைத்தாலும் துவளாமல் முயல்வதே நல்லது. விடா முயற்சியும் துணிவாக ஆற்றும் கருமமும் ஒருபோதும் வீணாவதில்லை. உதைபந்தாட்டத்தில் கூட இறுதி நேரத்திலும் நம்பிக்கையுடன் விளையாடியதால் வென்றன நாடுகள்

அப்துல்கலாம் விஞ்ஞானி கூட கூறுகிறார், உடலுக்கு மட்டும் தான் மரணம் வருவதல்ல. ஒவ்வொரு முயற்சியை கைவிடும்போதும் மரணம் ஏற்படுகிறதென்றார். ஆகவே நம்பிக்கையுடன் ஆர்வமாய் செயலில் ஈடுபட வைக்கிறது. தெளிவும் நல்ல மனநியையும் ஆராய்ந்து பார்க்கும் தன்மையும் வளர்கிறது. வாழ்வு என்ற வண்ணப் பூங்கா வனமாய் ஒளிர நம்பிக்கை எனும் எண்ணெய் தேவையாகிறது. நம்பிக்கையை வளர வளர உயர்ச்சி மேலோங்குது. எனவே எதிர்காலம் ஒளிமயமாக துலங்க நம்பிக்கையை கட்டி எழுப்புவோமா?

ஆக்கம் -

தமிழ்மணி நகுலா சிவநாதன் BA






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிஆனந்தனின் சிந்தனைகள்

## இடம்: –

கழுதையும் பட்டாம்பூச்சியும் உலாப்போயின. மைதானத்தில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். "இந்த இடத்தில் நான் இசைக்கச்சேரி வைப்பேன் இங்கே எனக்கு வரவேற்பிருக்கும்" என்றது கழுதை. அது பாடத்தொடங்கியது. என்ன கொடுமை.. கழுதைக் கச்சேரி - கல்வீச்சு, கலாட்டா என்று ஆகியது. அடிபட்ட கழுதையும் பட்டாம்பூச்சியும் ஊரின் எல்லையில் சாய்ந்து கிடந்த ஒரு குச்சிவேலியின் அருகில் வந்து சேர்ந்தன. கழுதைக்கு ஒரே கொண்டாட்டம். ஓணான்கள் வரிசையாக அங்கே வேலியில் உட்கார்ந்து தலையை ஆட்டிக்கொண்டிருந்தன. கழுதை மகிழ்ச்சியோடு பாடத்தொடங்கியது. என்ன ஆச்சரியம்!.. தலையை ஆட்டி எல்லோரும் கச்சேரியை ரசித்துக்கொண்டிருந்தார்கள். வியப்போடு அசைவற்று நின்ற பட்டாம்பூச்சியைப் பார்த்து ஒரு வண்டு " ஒன்றும் வியப்படையாதே...இங்கே அப்படித்தான்" என்று கூறியது. சுருக்கமாக அது சொன்னது..

"ஓணான்களின் ஊரில் கழுதைகளும் வித்துவான்களே"

## அலைவு: –

ஆறு, கடலில் ஒழிக்கலப்பதை - அலை கரையைத் தேடித் தழுவுவதையும் அன்றாடம் பார்த்து வந்த வானம்பாடி சிந்தனையில் ஆழ்ந்தது. "உலகம் புரிந்துகொள்ளமுடியாத ஒன்றுதான்"... என்றது வானம்பாடி. பிறகு அது பாடியது.

"மண்ணில் இருக்கின்ற ஆற்றுக்கு மண்ணில் வெறுப்பு
கடலில் ஆசை கடலில் இருக்கிற அலைக்கு கடலில்
வெறுப்பு...மண்ணில் ஆசை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாட்டுகின்ற வடுக்கள்.

காற்றின் அசைவுகளிலும் காலத்தின் நகர்வுதனிலும்-சில
கணிப்புகள் மாறிடலாம் கணக்குகள் விலகிடலாம்
ஆற்றில்போட்ட உடலங்கள் ஆறாதவடுகளாய்-கழுத்தை
அறுத்துப்போட்ட காட்சிகள் அழுதுநிற்பதால் அழியுமா
நேற்றின் நினைவுகளும் நிகழ்ந்த உயிப்பறிப்புகளும்-எம்
நெஞ்சக்கூட்டிலிருந்து நிரந்தரமாய் விலகிப்போமோ..?

ஏற்றிய தீபங்களெல்லாம் இருளினைப் போக்கலாம்-இந்த
எந்திரவாழ்வும் கூட இடம்மாறிமாறி நகர்ந்திடலாம்
கற்பினைச் சூறையாடிய காமுகரின் கொடுமைகள்-வாழும்
காலத்தால் கரைந்திடும் காட்சிகள் என்றாகிடாதோ
வேற்றுமண்ணில் வாழ்வோ வெளிச்சமாய் விரிந்தாலும்-விட்டு
விலகிடாத வடுக்களெல்லாம் விடுபட்டுப் போய்விடாதோ..?

ஆற்றியசேவைகளும் அரும்பெரும் பதவியும்சொத்தும்-83
ஆடிக்கலவரத்தில் முற்றாய் அழிந்தபின் எங்குபோவோம்
மாற்றிடம் எதுவுமேயின்றி மரணத்தின் வாசலிலே-சிறு
மறைவிடம் தேடுகையில் மரித்தஉறவுகள் எத்தனைபேர்
தேற்றிட யாருமின்றி தேம்பியழுதுநின்ற தமிழரை-எமது
தென்னகத்து உறவைத்தவிர திரும்பிநோக்கியவரெவரோ..?

தூற்றிப்போகின்றவனோ துன்பங்களை இழைப்பதில்லை-விழி
தோண்டியெடுத்து ரசித்தவனோ மிருகத்தின் ஜாதியில்லை
ஊற்றாய் ஓடிவந்த தமிழ்உதிர ஆற்றைக்கடந்தவர்களின்-ஈர
உள்ளங்கள் எப்படித்தான் உறங்கிட விழிகளைமூடிடுமோ
சோற்றுப் பருக்கையுமின்றி சிதைந்த எம்தேசத்தில்-ஒன்றாய்
சிரிப்புகள் துளிர்த்து வாழ்வு செழித்திடும்நாள் என்றுவரும்..?

அம்பலவன்புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் 165 அட்டைப்படக் கவிதை




பருவமறிந்து பயிர்செய்தாலே பயன்கொடுக்கும் என்பமெல்லாம்
பாரறிந்த விடயமென்று இங்கே பலரறிவதற்கு நியாயமில்லை
உருவம்பார்த்து ஊரறிந்து மண்ணில் உதிப்பதென்றும் அன்பில்லை
உள்ளத்தில் பிரவாகித்து ஓடிவரும் நதியினையொத்த உறவாக
மருவுகின்ற சமூகப்பணியில் மற்றவரைப் பாராட்டி மகிழ்ந்திட்ட
மாண்புகொண்ட எழுத்தாளர்சங்கத்தை மகிழ்ச்சியில் பாராட்டுவோமே.

துளித்துளியாய்ச் சேர்த்துவைக்கும் தேனீக்களாய் இவர்களின்னும்
தொடருகின்ற பணியினுக்கும் தொண்டினிற்கும் வாழ்த்துக்கூறி
வெளியுலகு அறிந்த இவரை வெவ்வேறு வகையில் உழைத்து
வெற்றிபெற்ற மாந்தராய்க்கண்ட வெள்ளிவிழா எழுத்தாளர்சங்கம்
மொழியினுக்கும் கலைகளுக்கும் முன்னின்று உழைத்தமைக்காய்
முன்னிலையில் இருத்திவைத்து பாராட்டியமைக்காய் வாழ்த்துவோமே.

அக்கறையில் சமூகத்துக்கும் அன்னைத்தமிழ்க் கலைகளுக்கும்
ஆற்றிவரும் சேவைகளுக்கு ஐவராய் ஒரணியில் உழைத்தவருள்
அக்கரையில் இருந்தபடி அரும்பணிகளை ஆற்றுகின்ற ஒருவர்
இக்கரையில் அவரிருந்தகால் இலங்கிய நற்பணிகளுக்காகவும்
சக்கரையில் பால்கலந்து சமைத்தெடுத்த இப்பாராட்டு நிகழ்வுக்காய்
சங்கத்தமிழ் எழுத்தாளர்சங்கம் சகத்தினில் உயருமென்பது திண்ணமே.

அம்பலவன்புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து.

கடந்த 27042014 அன்று ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் நடாத்திய பாராட்டுவிழாவில் ஐந்து எழுத்தாளர்களையும் பாராட்டி வாசிக்கப்பட்ட கவிதை.

பத்மகுணசீலன் ஐயா நீங்கள் பல் மொழி தெரிந்த
வித்தகராய் பணிபுரிந்து தமிழுக்கு அணிசேர்த்த
உத்தம வீரர் ஐயா உங்கள் சேவையைப் பாராட்டியே
எத்தனைபேர் இன்று கூடி வாழி என வாழ்த்துகிறோம்!...

ஜெயா நடேசன் என்னும் அன்பு அக்காவே
தாயகத்தின் துயர்துடைப்பு மட்டுமல்ல மனித
நேயத்திலும் தமிழ்வளர்ச்சியிலும் ஆற்றிடும் பணிகளுக்கு
தூய தமிழால் வாழி வாழி என வாழ்த்துகிறோம்!...

கலைவாணியே அம்மா தாயே எமக்கெல்லாம்
தலையான முத்தமிழுக்கு அணிசேர்த்த பெருந்தகையே
அலைவானில் ஆயிரம் கடந்த பாடல்களும் பாடியே
மலைபோல் உயர்ந்து நிற்கும் பெண்ணே நீ வாழி வாழியவே!...

அருந்தவப் புதல்வனாம் எங்கள் அருந்தவராசா
பெருவிருட்சமான எங்கள் தமிழின் செழுமைக்கு
உருவாக்கினாய் ஐந்து ஆறு நூல்களை ஒரே மேடையில்
குருவாகி விருதாகிய பல்கலை வித்தகனே வாழி வாழியவே!...

புத்தி அண்ணா உங்கள் பெயரைப்போலவே என்றும்
நித்தியம் பாடும் முத்தமிழ் ஓங்கி வளர்ந்து ஓங்கிட
சத்தியமாய் நீங்கள் முத்தமிழுக்காக உழைக்கும் வித்தகரே
முத்தி பெற்று என்றும் முழுநிலவாய் வாழி வாழியவே!...

திருமதிஇராஜேஸ்வரி
ஜேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுலா!.

இடமாற்றமும் மனமாற்றமும்
பலகோண மாற்றங்களும்
மனதிற்கு இனிமை தரும்
மகிழ்வு தரும் சுற்றுலா!.....

கனத்த மனதிற்கு
தயக்க மனதிற்கு
அமைதி தரவும்
அருமையான சுற்றுலா!...

விழிக்கின்ற கண்களுக்கு
உறக்கம் தரவும்
விதம்விதமான கனவுகளை
தரும் நல்ல சுற்றுலா!....

பிள்ளைகளின் எதிர்கால
அறிவு விருத்திக்கும்
ஆனந்த மகிழ்வுக்கும்
இதமானது சுற்றுலா!...

விரைவிலே முடிந்துவிடும்
என மனம் ஏங்கிடும்
விந்தையானது இந்த
இனிமையான சுற்றுலா!....

சுகுமாரன் - ஜேர்மனி

## வறுமை தீருமா!.

கண்ணீரோடு காலம் கடத்தும
பரம்பரையின் வறுமையினால
பிஞ்சுக் குருத்துக்களும்
பிணைக்கப்படுகிறார்கள்
வேலைத் தளங்களில்
பள்ளிக் காலத்தில்
செய்யும் தவறுகளால்
ஆசான்களின் அன்பான
கண்டனங்களுடன் கற்க
வேண்டிய சிறுவர்கள்-இன்று
முதலாளிகளின் - முறாய்ப்பான
சீண்டல்களுடன் - இவர்கள்
தீராத வறுமையில்!...

செல்விதுசயந்த
முருகானந்தம்
ரீத் மிஷன
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடலைஞானம்!.

பூத்த மலர்கள் வாடிய போதும்
புதிதாய் ஒரு மொட்டு மீண்டும் மலரும்
வானை இருள் மூடிய போதும்
ஒரு நாள் முழுநிலா வானில் தெரியும்
வசந்த காலம் மறைந்த போதும்
மீண்டும் ஒரு வசந்தம் வரத்தானே வேணும்
இயற்கை என்றால் இடியும் இருக்கும்
மழையும் அடிக்கும்
வாழ்க்கை என்றால் துன்பமும்
இன்பமும் கலந்தே இருக்கும்
ஓடும் நதியில் அழுக்கும் சேரும்
மலையோரம் மூலிகை வளமும் கலந்தே ஓடும்
நீண்டு போன நெடும் சாலை முடியும்
அது குறுக்குப் பாதையில் நெளிந்தே ஓடும்
வெட்டிய மரமும் மொட்டையாய் நிற்கும்
சில நாள் கழித்துப் புதிதாய் தளிர்க்கும்
சாவை நோக்கி நீ நடக்கின்ற போதும்
சுடலை ஞானம் உனக்கு கிடைக்கும்

கவி மீனா
ஜேர்மனி

## முடியுமா!.

மூடிய கதவுகள்
திறக்கப்பட்டாலும்
முடவர்களால்
எப்படி ஓடமுடியும்!...

## கோபுரம்!.

ஏழைத் தமிழர்களின்
இயலாமையைப் பயன்படுத்தி
கோடீஸ்வரக் குள்ளநரிகள்
இப்போ கோபுரத்தில்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பக்களிப்பினிலே.

உதயத்தின் கிழக்கை நோக்ிப் பார்த்தேன்
மெல்லச் சிவக்கிறது கிழக்கு வானம்
தொடுவானத்தைப் பிய்த்துக் கொண்டு
அள்ளிப் பரப்புகின்ற ஒளிக்கீற்றுக்கள்
இவை ஆதவன் உதயத்தின் அழகல்லவா!...

உச்சிக் பொப்பிலே பலமொட்டுக்கள் சிலிர்க்க
இசைபாடி தேனைச் சேகரிக்கும் தேனீக்கள்
மலருக்கு மலர் மேல் தாவி
மகரந்தச் சேர்க்கையாகி இனிய கனியாக
இன்பக் களிப்பிலே பறித்துண்டு சுவைப்பேன்!...

வர்ணம் தீட்டியதுபோல் காட்சிதனை
என்னைக் கவரவைத்து கவி புனைய வைத்து
கவிஞையாக்கிய இன்பக் களிப்பினிலே
வர்ணப்பேனாக்கள் வாங்கிக் குவித்தேன்
எனது வாழ்க்கையின் வரிகளை
வரைந்து கிறுக்கல் செய்தேன்!...

கவிதை கட்டுரை கதை இலக்கியங்களாக
எழுதி வடித்தபோது வர்ணமாக அமைய
படித்துப் படித்து ரசித்த களிப்பினிலே
அழகு அழகாகக் கருக்கொண்ட கவிதைகளாக
850 கவிதைகளை எழுதி முடித்தேன்!...

இன்று அது அரங்கத்தில் அரங்கேறியபோது
வாழ்த்துரைகளும் வாழ்த்துச் செய்திகளும்
வந்து குவிந்தபோது இன்பக்களிப்புற்றேன்
எழுதி முடித்து அரங்கேறிய வியப்பின் களிப்பில்
இன்று நான் உயர்ந்து பெருமை பெற்றேன்!...

திருமதிஜெயாநடேசன்
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரின் அடைக்கலம்

காற்றென்ற கண்தெரியாக் கருவி
காவி நிற்கும் உயிரே எம் பதவி
அடைக்கலமாய் அடைத்து வைத்து பலுன் போல்
அடைத்து வைத்து காத்திருக்கோம் உயிரை
பெரிதென்றும் சிறிதென்றும் பின்னுகின்ற வலை
போராட்டம்

போடுகின்ற எண்ணம் எங்கள் நிலை
ஈர் ஐந்து திங்கள் என்னை கருவிற்குள் சுமந்தாள்
ஈகைக்கு இலக்கணமாய் தாய் நிலமே தவழ்ந்தாள்
இன்பத்தோடு துன்பமதை தோழமையாய்த் தாங்கி
இன்றுவரை எனக்கென்று இறையருளை நாடி
அன்பெனும் வலைப்பின்னல் ஆசானாய் வாழும்
அத்திவார பூஞ்செடியே அன்னையெனும் மாதா

தொத்தி வர படியமைத்த ஏணி எங்கள் பிதா
வேற்றகத்து காணிக்குள் வீற்றிருக்கும் அடைக்கலம்
விலத்தி வந்த தாய்நிலத்தை வணங்குகின்ற சுதந்திரம்
போற்றுகின்றேன் தலை சாய்த்து உயிர் தந்த கொடைவளம்.

வசந்தா ஜெகதீசன்
ஜேர்மனி

## சொத்து!.

தேசியத்தின் சொத்து
சில மனிதர்களுக்கு
உறுதி எழுதப்பட்டு
உரிமையாகியதே சொத்து!..

## வீரவசனம்!.

உள்நாட்டில் கிராமங்கள்
வேரோடு பிடுங்குகையில்
தேரோட்டிக் காசு பிழைத்தே
வெளிநாட்டில் சிலர் வீரவசனம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவு - 141

(வைகாசி - ஆனி - 2014)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தொ | ழி | லா | ளா | ர் | ல | ம |
| ற் | று | னி | ன் | வ | ய | ல் |
| று | ற் | பு | ல | வ | ர் | லி |
| நோ | கா | பு | வ | தி | க | அ |
| ய் | பா | ப் | கோ | ட் | டை | ம் |
| க | ன் | னி | டா | ட | ட் | மா |
| ண் | மா | இ | ரி | ம் | ப | றை |

போட்டியில் கலந்துகொண்டவர்களும். பரிசு பெறுபவரும்.

திருமதி.ஜெயா.நடேசன் - Havixbeck
திருமதி.தர்மினி.சிவநேசன் - Swiss
திருமதி.கலைவாணி.ஏகானந்தராசா - Weeze
திருமதி.சுலோசனா.புவனேந்திரன் - Duisburg
செல்வி..துசயந்தி.முருகானந்தம் - Kilinochci
செல்வன்.ரமேஸ். கணேஸ் - Vavuniya

போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும்...இவர்களில் பரிசுபெறும் அதிஸ்டசாலி..

செல்வன்.ரமேஸ்.கணேஸ் - Vavuniya



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி -142
## (ஆடி - ஆவணி - 2014)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ:-

01-05 பருவகாலம் ஒன்று

15-17 இனிப்பான தின்பண்டம்

23-26 நாம் கட்டிக்காப்பாற்றவேண்டியதில் ஒன்று.

27-28 இவை அழிவதால் காலநிலை மாறுபடுகின்றது

29-32 வன்னி நிலப்பரப்பில் முக்கிய நகரம்

36-38 சிலருக்குச் சரியான இது கிடைப்பதால் முன்னேறுகிறார்கள்

வ-இ:-

07-05 ஜேர்மனியர்கள் இது கட்டுவதில் உலகில் பெயர் பெற்றவர்கள்

11-10 மீனவன் வைத்திருப்பது

35-32 இலங்கையில் இந்த நோயால் இறப்பவர்கள் தொகை அதிகரித்துள்ளது.

41-39 இலக்கியத்தில் ஒருவர்

48-45 நம் முகத்தில் எப்போதும் இதுகாணப்படின் சந்தோஷம்தான்.

கீ-மே:-

23-02 ஆடைவகைகளில் ஒன்று

25-04 ஒரு துறையில் பாண்டியத்துவம் பெற்றவர்களை இப்படியும் அழைப்பர் (கு)

27-13 ஒற்றுமைக்குப் பெயர்போன பறவை

43-22 சூரியன் ஒத்தசொல்.

44-30 இது சொல்வது கெடுதியை விளைவிக்கும் ஒத்தசொல்

மே-கீ:-

01-22 இலக்கியத்தில் இருபெண்மணிகளுக்குக் கணவன்.

07-28 நமக்கு இதுகிடைக்கும்போது பணிகள் உச்சமடைகின்றன.

12-26 மலர் இனங்களில் ஒரு பருவம்

35-49 தானிய வகைகளில் ஒன்று

48-41 நெருப்பில்லாமல் இதுவராது என்பர்

முடிவுதிகதி: 30082014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமாய்வாழ!. "நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்"

## மருத்துவக் குணம் நிறைந்த வெந்தயம் (மேழிக்குமரன்)

உணவில் அன்றாடம் நாம் பயன்படுத்தும் பொருட்களில் ஒன்று வெந்தயம். உணவுக்கு ருசியைக் கொடுப்பதோடு, அதில் உள்ள பல்வேறு மருத்துவக் குணங்கள் நம்மை நோய்களில் இருந்தும் பாதுகாக்கிறது. எண்ணற்ற மருத்துவ குணங்களைக் கொண்டுள்ள வெந்தயத்தின் சிறப்புகளையும், வெந்தயத்தால் குணமாகும் நோய்களையும் பார்ப்போம். விதைகளில் கார்போஹைட்ரேட், சர்க்கரையும் முதிர்ந்த விதைகளில் அமினோ அமிலங்கள், கொழுப்பு அமிலங்கள் கரோட்டீன் வைட்டமின்கள், ஆகிய வேதிப்பொருட்கள் உள்ளன.

### மருத்துவப் பயன்

நோயை தீர்க்கும். சிறுநீர்க்கழிவை அதிகரிக்கும். அஜீரணத்தைப் போக்கும். மாதவிடாய் போக்கை அதிகரிக்கும். துவர்ப்புள்ளது. தோலை மிருதுவாக்கும். வயிற்றுப்போக்கு, வயிற்று வலி, வாயுக்கோளாறு, சீதபேதி, பசியின்மை, இருமல், நீர்க்கோவை, ஈரல், மண்ணீரல் வீக்கம், வாதநோய், ரத்தசோகை, நீரிழிவு நோய் ஆகியவற்றை குணப்படுத்தும்.

### உடல் மினுமினுக்கும்

உடலை வனப்புடன் வைப்பதில் வெந்தயத்தின் பங்கு அலாதியானது எனலாம். ஒரு தேக்கரண்டியளவு வெந்தயத்தை எடுத்துக் கொண்டு, வாணலியில் போட்டு வறுத்து, ஆற வைத்த பின் மிக்ஸியில் பொடி செய்து கொள்ளுங்கள். வெந்தயப் பொடியை தேவைப்படும் போது தண்ணீரிலோ மோரிலோ கலந்து பயன்படுத்தலாம். தினமும் காலையில் வெறும் வயிற்றில் வெந்தயத்துடன் கொழுந்தாக இருக்கும் கறிவேப்பிலையை தயிரில் துளி கல் உப்பு கலந்து ஊற வைத்து சாப்பிட தோலில் மினுமினுப்பு வரும்.இரவில் தூங்குவதற்கு முன் ஒரு சிட்டிகை அளவு சுத்தமான வெந்தயத்தை எடுத்து, 200 மி.லி. அளவு தண்ணீரில் போட்டு மூடி வைத்து விடவும். காலையில் எழுந்ததும் வாய் கொப்பளித்த பின் தண்ணீரில் ஊறிய வெந்தயத்தை சாப்பிடுங்கள். பின் வெந்தயத் தண்ணீரை குடியுங்கள். தேவைப்பட்டால் கூடுதலாக குளிர்ந்த நீரினையும் குடிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் ஒருமுறை இதுபோன்ற வெந்தயத் தண்ணீர் குடித்து வர, உடல் சூடு, மலச்சிக்கல் என எந்த நோயும் உங்களை அண்டவே அண்டாது.மூட்டுவலியை குணமாக்கும்மூட்டுவலிக்கு வெந்தயத் தண்ணீர் மிகவும் அருமருந்தாகும். சர்க்கரை நோய் இல்லாதவர்கள் மூட்டு வலி ஏற்பட்டால், வெந்தயப் பொடியை சிறிய வெல்ல கட்டியுடன் கலந்து சிறு உருண்டையாக்கி தினமும் 3 முறை சாப்பிட மூட்டு வலி குறையும். வயிற்றுப்போக்கு ஏற்படும் பட்சத்தில், வெந்தயம் - பெருங்காயப் பொடியை ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை என 3 முறை குடிக்க வயிற்றுப்போக்கு கட்டுப்படுத்தப்படும்.

## நீரிழிவை தடுக்கும் வெந்தயம்

வெந்தயத்தில் பாஸ்பேட்டுகளும், லிஸிதின், நியூக்லியோ, அல்புமின் நிறைந்து இருப்பதால் உடல் வளர்ப்பதோடு பசியின்மையைப் போக்குகிறது. அனிமியா என்னும் இரத்தசோகை அண்டாது. ரிக்கெட்ஸ் நோய்க்கு பரிகாரமும், இதுவே நீரிழிவுக் காரர்களுக்கும் நல்லது.தினமும் இரு தேக்கரண்டியளவு வெந்தயத்தை பொடித்தோ, முழசாகவோ கொடுத்து வந்தால் ரத்தத்திலுள்ள கூடுதல் சர்க்கரை கட்டுப்படும். அல்லது வெந்தயத்தை ஒரு டம்ளர் தண்ணீரில் ஊறவைத்து தண்ணீரை மட்டும் வடிகட்டிக் குடிக்கலாம்.

## பிரசவித்த பெண்களுக்கு அருமருந்து

பாலூட்டும் தாய்மார்களுக்கு பால் நன்றாக சுரக்க வெந்தயத்தை வறுத்து இடித்துக் கொடுக்கலாம். மாதவிடாய் சமயத்தில் அதிக அளவு ரத்தப் போக்குடையவர்களுக்கும் பிரசவித்த பெண்களுக்கும் வெந்தயத்தை வறுத்து இடித்து நெய், சீனி சேர்த்து அல்வா செய்து கொடுப்பது இழக்கும் தெம்பை மீட்க உதவும்.

வெந்தயக் களி உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடியது. கோடை காலத்தில் உடல் சூட்டில் இருந்து தப்பிக்க வாரம் ஒருமுறை வெந்தயக் களி செய்து சாப்பிடலாம். ரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்யவும் வெந்தயம் பயன்படுகிறது. பிரசவமான பெண்களுக்கு கஞ்சியில் வெந்தயத்தைச் சேர்த்து காய்ச்சிக் கொடுக்க பால் சுரக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கை கருத்தடை

கணையம், கல்லீரல் வீக்கம், வயிற்றுப் போக்கு, அஜீரணம், நெஞ்சு எரிச்சல்... போன்ற பல்வேறு உடல் உபாதைகளுக்கும் வெந்தயம் ஒரு மாமருந்து. வயிற்றுக் கோளாறுக்கு மட்டுமல்லாது, வெந்தயநீர் காய்ச்சலையும் கட்டுப்படுத்தும். சிறுநீர்ப்போக்கை சீராக்கும். இயற்கை முறையில் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு வெந்தயம் உதவுவதாக சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர். தொடர்ந்து வெந்தயம் சாப்பிட்டு வருபவர்களுக்கு சுலபத்தில் கருத்தரிக்காதாம்.

### முடி கொட்டுவதை தடுக்கிறது

அளவுக்கு மிஞ்சி நிறைய முடி உதிர்ந்து என்ன செய்வது என்று கவலைப் படுபவர்களுக்கு உதவுவதும் வெந்தயம்தான். முடி கொட்டாமல் செழித்து வளரவும், தலைக்கு குளுமையளிக்கவும் வெந்தயத்தை சீயாக்காயோடு சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு தலைக்குக் குளித்து வருவது கைமேல் பலந்தரும்.

## உச்சி முதல் பாதம்வரை குளிர்ச்சியூட்டும் கற்றாழை

இயற்கையிலேயே பல்வேறு சத்துக்ளை கொண்ட கற்றாழையை பொதுவாக அழுத்த நிவாரணி என்று அழைக்கிறோம்.இயற்கை சத்துக்களான வைட்டமின்கள், தாதுக்கள், அமினோ அமிலங்கள் அடங்கியுள்ள கற்றாழை, உடலை குளிர்ச்சியாக வைத்துக்கொள்ள உதவுகிறது.மேலும் கற்றாழையை சாறு செய்தும் குடிக்கலாம். கற்றாழைச் சாறு போதையை நீக்க உதவுகிறது.கற்றாழையை கழுவி அதன் தோல் நீக்கி குழம்பு வைத்து சாப்பிட்டால் மலச்சிக்கல் போகும். கடும் வயிற்றுப்புண்ணுக்கு கற்றாழை இலையின் சாறு பயன்படுகிறது அதோடு வயிற்றில் உள்ள நாக்குப் பூச்சிகளையும் வெளியேற்றுகிறது.மேலும் கற்றாழை முக அழகு சாதனங்கள் தயாரிப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது.இதன் ஜெல் போன்ற பகுதியை பதப்படுத்தி குளிர்பானம் தயாரிக்கலாம்.கற்றாழையின் வேரை அவித்து, உலர்த்திப் பொடி செய்து, 15 மில்லி பாலுடன் கொடுக்க சூட்டு நோய்கள் தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதாரச் செய்திகள்: -

இரத்தச் சோகையால் பாதிக்கப்படும் தாய்மாருக்குப் பிறக்கும் குழந்தைகள் குறைந்த நிறை கொண்டதாக இருக்க வாய்ப்புள்ளது. அந்தக் குழந்தைகள் சிசுவாக இருக்கும்போதோ அல்லது சிறு பராயத்திலோ உயிரிழக்கும் ஆபத்தும் உள்ளது.உரிய காலத்துக்கு முன்கூட்டிய பிறப்புகள், தாமதமான வளர்ச்சி போன்ற பிரச்சனைகளும் இரும்புச் சத்துக் குறைபாட்டினால் வரும் இரத்தச் சோகை காரணமாக ஏற்படலாம்.

உலகில் ஒவ்வொரு நாளும் கர்ப்பம் மற்றும் குழந்தைப்பேறு சம்பந்தமான காரணிகளால் 800 பெண்கள் மரணமடைவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது! இவர்களில் பெரும்பாலானவர்கள் வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்கள். அதேவேளை உலகில் தினமும் பலவகை நோய்களால் ஐந்து வயதுக்குட்பட்ட சுமார் 18.000 குழந்தைகளும் இறப்பதாகத் தெரிக்கப்பட்டுள்ளது.

தற்போது உலகம் முழுவதும் சுமார் 1 கோடி மக்கள் எயிட்ஸ் நோயாளிகளாகக் காணப்படுகிறார்கள் எனவும் 2015ம் ஆண்டில் இன்னும் 65 லட்சம் புதிய நோயாளிகள் மரணமாவார்கள் எனவும் இதில் 70 வீதமானோர் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பர் எனவும் ஐக்கியநாடுகள் சபையின் சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

World Vision of India என்ற ஆய்வு நிறுவனம் நடாத்திய ஆய்வில் 5 வயதிற்குட்பட்ட சுமார் 4.700 குழந்தைகள் தினமும் பல்வகையான நோய்களினால் இறப்பதாகத் தெரியவந்துள்ளது. குழந்தைகள் பாதுகாப்பு மருத்துவ சேவையில் 176 நாடுகளிடையே எடுக்கப்பட்ட ஆய்வில் இந்திய 135வது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

ஒரு ஆண்டில் சுமார் 130 கோடி தொன் உணவு அநியாயமாகக் கொட்டப்படுவதால் நாள் ஒன்றுக்கு 87 கோடி மக்கள் உணவின்றிப் பரிதவிப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு தாபனம் குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தியாவட்டைப்பூ

காசம் படலங் கரும்பாவைத் தோஷமெனப்
பேசுவிழி நோய்க்கடமைப் பேர்ப்பதன்றி-யோசைதரு
நந்திபோலே தெறிந்துச் சாறு மண்டை நோயகற்று
நந்தியா வட்டைப் பூ நன்று

நந்தியாவட்டைப் பூ நாகதோஸம், ரோகம் என்பன போக்க வல்லதாம், இப்பூவில் அடுக்கு நந்தியாவட்டை ஒற்றை இதழ் நந்தியாவட்டை என இரண்டு வகை உண்டு.

இப்பூவை எடுத்துக் கண்ணை மூடிக்கொண்டு கண்ணுக்கு ஒத்தடம் கொடுக்க கண்ணில் உள்ள எரிச்சல், சூடு போன்ற நோய்கள் குறையும், கண்ணில் ஏற்படும் கக்கட்டி எனப்படும் கட்டிகள் உண்டாகும் நோய்க்கு முலைபாலில் தோய்த்த நந்தியாவட்டை பூவாலே ஒத்தடம் கொடுப்பது நம்ம ஊரிலே வழக்கத்திலிருந்து வந்தது, இந்த வைத்திய முறையாலே சூட்டிலே உண்டாகும் இந்த நோய் குணமாகிறது.

இந்தத் தாவரம் ஒரு மூலிகை இனத்தை சேர்ந்தது இதன் பூ முதல் வேர்வரை இயற்கை மருத்துவத்தில் பிரயோசனபடுகிறது, இதன் வேரை எடுத்து கசாயம் செய்து குடிக்க வயிற்றுப் போக்கு குறையும் என்றும் வேரை பச்சையாகவே சப்பித் துப்ப பல் வலி நீங்கும் எனவும் இயற்கை மருத்துவம் கூறுகிறது.

இந்த மலர் வாசம் மிகுந்தது, பூசைக்கு உகந்தது அம்மனுக்கு மிகவும் பிடித்த மலராகும், இந்த தாவரத்தை கோவில் நந்தவனங்களிலும் வீட்டுத் தோட்டங்களிலும் நட்டுவைப்பார்கள், நந்தியாவட்டை தாவரங்களை வீட்டில் வளர்ப்பதால் அந்தத் தாவரம் பூக்களை பூக்கும் காலத்தில் வாசனை கிடைப்பது மட்டுமின்றி, நாகதோசங்களும் நீங்கப்பெறும் என்பது இந்துமதத்தில் கூறபடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தியாவட்டை மலர்களினால் இறைவனுக்கு அர்ச்சனை செய்து வருவோமாகில் எமது பொருள் பற்றாக்குறையை நீக்கி செல்வத்தை கொடுக்கும் என நம்பப்படுகிறது, நமது வீடுகளில் வளர்க்கவேண்டிய செடிகளில் நந்தியாவட்டை மிகவும் அவசியமாக கருதப்படுகிறது, இத்தாவரம் ஐரோபாவிலும் வாங்ககூடியதாக உள்ளது இதனால் நாமும் இத்தாவரத்தை எமது வீட்டுத் தோட்டதிலோ, பல்கணிகளிலோ நடக்கூடியதாக இருப்பது எமக்கு ஒரு அரிய வாய்பாக உள்ளது. நந்தியாவட்டை மலர்களைப் பாரி ஜாதமலர் என்றும் சொல்வார்கள், இந்தச் செடி கற்பகவிருட்சங்களில் ஒன்றாகவும், அம்மனுக்கு மிகவும் பிடித்த மலராகவும் உள்ளது, நாமும் இந்தச் செடிகளை நம் வீடுகளில் நட்டு இதன் பலனை அனுபவிப்பதே சிறப்பாகும்.

கவி மீனா – ஜேர்மனி

## சமயங்கள்.

தற்போது உலகில் அறுநாறுக்கும் அதிகமான சமயங்கள் காணப்படுவதாக ஆய்வு ஒன்று எடுத்துக்கூறியுள்ளதாக ஜேர்மனிய பத்திரிகைச்செய்தி ஒன்று குறிப்பிட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| இஸ்லாமியர்கள் | - 1500 | மில்லியன் |
| கத்தோலிக்கர்கள் | - 1200 | " |
| இந்துக்கள் | - 900 | " |
| புரட்டஸ்தாந்தவர்கள் | - 400 | " |
| பௌத்தர்கள் (யுன்ரா பரிவு) (Junta) | - 400 | " |
| ஒத்தடொக்ஸ் சமயத்தவர்கள்(Orthodoxe) | - 40 | " |
| ஒத்தடொக்ஸ் (இன்னொரு பிரிவு | - 20 | " |
| சீக்கிய சமயத்தவர்கள் | - 23 | " |
| யூத சமயத்தவர்கள் | - 15 | " |
| யப்பான் பௌத்தர்களில் ஒரு பிரிவு | - 04 | " |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநாட்டியம் (சென்ற இதழ் தொடர்ச்சி)

திருமதிசாந்தினி துரையரங்கன்
ஜேர்மனி

## த்யான சுலோஹம்

இது சிவபெருமானை குறித்து செய்யப்படும்ஒரு சுலோகம் ஆகும்.

ஆங்கிகம் புவனம் யஸ்ய வாச்சிகம்
ஸர்வ வாங்மயம்/
ஆஹார்யம் சந்திர தாராதி தம் நுமஹ்
சாத்விகம் சிவம்//

| | கருத்து | பயன்படுத்தப்படும் முத்திரை |
|---|---|---|
| ஆங்கிகம் | உடம்பு | பிரளம்பம் |
| புவனம் | உலகம் | சூசி |
| யஸ்ய | கேள்வி கேட்டல் (என்ன) | பிரளம்பம் |
| வாச்சிகம் | பேசும் வார்த்தை | முகுளத்தில் இருந்து அலபத்மம் |
| ஸர்வ | எல்லாம் | சூசி |
| வாங்மயம் | மொழி(பாஷை) | திரிலிங்கத்தில் இருந்து சந்திரகலா |
| ஆஹார்யம் | ஆடை,ஆவாரணங்கள் | சதுரம் |
| சந்திர | சந்திரன் | அலபத்மம் |
| தாராதி | நட்சத்திரங்கள் | சிலிட்டைக் காங்கூலம் (காங்கூல பேதம்) |
| தம் | உம்மை | சூசி |
| நுமஹ் | வணங்குதல் | அஞ்சலி |
| சாத்விகம் | பரிசுத்தம் (சாந்தம்) | கம்சாசிகம் |
| சிவம் | சிவன் | சிவலிங்கம் |

### கருத்து

உலகத்தை உடம்பாகவும், பேசும் வார்த்தைகள் யாவும் ஒரே (மொழி) பாஷையாகவும், சந்திர நட்சத்திரங்களை ஆடை,ஆபரணங்களாகவும், அணிந்த பரிசுத்தமான சிவபெருமானை வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடவு

பரத நாட்டியத்தின் ஆரம்ப பயிற்சிகள் அடவுகள் என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றன.ஆடலின் ஆதாரம் அடவுகளாகும். ஒரு மொழிக்கு ஆதாரமாக வாக்கியங்கள் உள்ளனவோ அதே போல நடனத்திற்கு அடவுகள் ஆதாரமாக உள்ளன. நிலை(ஸ்தானகம்), பாதபேதங்கள்(சாரி), முத்திரைகள் (ஹஸ்தங்கள்) என்ற அம்சங்களை உள்ளடக்கியதாக அடவுகள் அமைகின்றன. அதிகமான அடவுகள் அரைமண்டியில் இருந்து செய்யப்படும். எல்லா அடவுகளும் மூன்று காலங்களில் ஆடிப்பயிற்சி செய்ய வேண்டும். சிலர் பயிற்சிக்காக மேற் காலங்களிலும் (நான்காம் காலம்) செய்வார்கள்.

நாட்டியத்தில் பல வகையான அடவுகள் உள்ளன.காலினை தட்டிச் செய்வது தட்டடவு, காலினை நாட்டிச் செய்வது நாட்டடவு, குதித்து மெட்டிச் செய்வது குதித்துமெட்டடவு, தட்டி மெட்டிச் செய்வது தட்டு மெட்டு என்றும் பல அடவுகள் உள்ளன.

அடவு என்னும் சொல் வேறு இடங்களிலும், வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. அடவு என்பது நடனத்தின் ஓர் அளவை என்றும் தமிழில் ஆடல் என்ற வேர்ச் சொல்லைக் கொண்டது அடவு என்றும் தெலுங்கு மொழியில் அடவு என்றால் பாதத்தின் ஓர் அடி என்பது பொருள் என்றும் தம் பரதக் கலைக் கோட்பாட்டில் டாக்டர் பத்மா சுப்ரமணியம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பரதத்தில் பந்தனை நல்லூர் பாணி, வழவூர்பாணி, தஞ்சாவூர் பாணி எனப் பல பாணிகள் (style) உள்ளன. ஒவ்வொரு பாணிகளிலும் வித்தியாசமான பல அடவுப் பயிற்சிகளும் அவற்றிக்குரிய சொற்கட்டுக்களும் காணப்படுகின்றன.

அடவுகளை சரியான முறைப்படி பயில்வது அவசியமானது. அங்க சுத்தத்துடன் மனதினை அதில் பதிய(லயிக்க) வைத்து செய்வதால் தான் அது பார்ப்பதற்கு ரசிக்கும் வண்ணம் அமைந்திருக்கும்.

அடவுகளின் தாளம் அதிகமாக சதுஸ்ர நடையில் அமைந்திருப்பதனால் ஒரு தட்டிற்கு நான்கு மாத்திரை என்ற எண்ணிக்கையின் அடிப்படையில் தாளம் போடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி தாளம் - 1₄ O₂ O₂ - 8 (அட்சரம்)எண்ணிக்கை 8 X 4= 32 மாத்திரை

சதுஸ்ர ஜாதி ரூபக தாளம் - O₂ 1₄ - 6 எண்ணிக்கை 6 X 4= 24 மாத்திரை

தாளம் தொடர்பான சில குறியீடுகள்.

I. தாள அங்க முடிவு - அங்கம் என்பது லகு, த்ருதம், அனுத்ருதம் என்பதை குறிப்பதாகும்.

II. ஆவர்த்தன முடிவு - ஒரு தாளத்தில் உள்ள அட்சரங்களை ஒரு முறை (தாள வட்டம் ) போட்டு முடித்தால் அது ஒரு ஆவார்த்தனம் எனப்படும்.

. - 1 அட்சர காலத்தைக் குறிக்கும் கார்வை குறியீடு

; - 2 அட்சர காலத்தைக் குறிக்கும் கார்வை குறியீடு.

1) **தட்டடவு**

- அரைமண்டியில் இருந்து காலினால் தட்டி செய்வது தட்டடவாகும்.
- இதில் எட்டுவகையான அடவுகள் உண்டு.

**சொற்கட்டுகள்.** தாளம்.

1),2)தெய்,யா தெய்,; தெய்,யா தெய்,;/
தெய்,யா தெய்,;/ தெய்,யா தெய்,;// - ஆதிதாளம்

3) தெய்,யா தெய்,யா/ தெய்,/ தெய்,யா தெய்,யா தெய்,;//
-சதுஸ்ரஜாதி ரூபகதாளம்

4) தெய்,யா தெய்,யா தெய்,யா தெய்,;/
தெய்,யா தெய்,யா/ தெய்,யா தெய்,;// - ஆதிதாளம்

5) தெய்,யா தெய்,யா தெய், தெய், தாம்;/
தெய்,யா தெய்,யா/ தெய், தெய், தாம்;// - ஆதிதாளம்

6) தெய்,; தெய்,; தாம்;;;/ தெய்,; தெய்,; தாம்;;;// - ஆதிதாளம்

7) தெய்,; தெய்,; தத்,; தத்,;/ தெய்,; தெய்,; தாம்; ;;// - ஆதிதாளம்

8) தெய்,; தெய்,;/ தெய்,; தெய்,; தித்,தித்,தெய்,;// - சதுஸ்ரஜாதி
-ரூபகதாளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நாட்டடவு

அரைமண்டியில் இருந்து கால்களை நாட்டிச் செய்வது நாட்டடவு ஆகும்.
இவ் அடவிலும் எட்டு வகையுண்டு.
எட்டு நாட்டடவிற்கும் தெய்யும் தத்த தெய்யும் தாம் என்ற சொற்கட்டே பயன்படுத்தப்படுகிறது.
சொற்கட்டுகளின் எண்ணிக்கையில் மாற்றங்கள் உண்டு.
எல்லா நாட்டடவும் ஆதிதாளத்திலே அமைந்திருக்கின்றது.

| எண் | சொற்கட்டுக்கள் | முத்திரைகள் |
| --- | --- | --- |
| 1,2 | தெய்,யும், தத்,த, தெய்,யும், தாம்;/ | திரிப்பதாகம் |
| 3 | தெய்,யும், தத்,த, தெய்,யும், தாம்;// தெய்,யும், தத்,த,/ தெய்,யும், தாம்;// | திரிப்பதாகம் |
| 4 | தெய்,யும், தத்,த, தெய்,யும், தாம்;/ தெய்,யும், தத்,த,/ தெய்,யும், தாம்;// தெய்,யும், தத்,த, தெய்,யும், தாம்;/ தெய்,யும், தத்,த;/ தெய்,யும், தாம்;// | திரிப்பதாகம் |
| 5 | தெய்,யும், தத்,த, தெய்,யும், தாம்;/ தெய்,யும், தத்,த, தெய்,யும், தாம்;// | கடகாமுகம்,அலபத்-மம்,திரிப்பதாகம். |
| 6 | தெய்,யும், தத்,த, தெய்,யும், தாம்;/ தெய்,யும், தத்,த;/ தெய்,யும், தாம்;// | திரிப்பதாகம் |
| 7 | தெய்,யும், தத்,த, தெய்,யும், தாம்;/ தெய்,யும், தத்,த, தெய்,யும், தாம்;// | கடகாமுகம்,அலபத்மம். |
| 8 | தெய்,யும், தத்,த, தெய்,யும், தாம்;/ தெய்,யும், தத்,த;/ தெய்,யும், தாம்;// | கடகாமுகம்,அலபத்மம், சூசி,முஸ்ரி,பதாகம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநாட்டிய அரங்கேற்றம்

திரு.திருமதி.துஷ்யந்தி.ஜெகதீஸ்வரன் அவர்களின் ஏக புதல்வியும் பரதசூடாமணி துஷ்யந்தி. ஜெகதீஸ்வரனின் மாணவியுமான டியானி.ஜெகதீஸ்வரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் சென்ற 26.04.14. அன்று ஜேர்மனி கேர்ப்பன் நகரத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது. .மிக எளிமையான முறையில் தயாரிக்கப்பட்ட அழகான அழைப்பிதழுடன் அந்த அழகிய மண்டபத்தின் உள் நுளைந்தேன் ...வழமைபோல் வாசலில் சந்தன குங்குமம் வரவேற்பில் மகிழ்ந்திருந்த என்னை வாங்க!.. வாங்க!.. என்று இன்முகத்துடன் ஒரு மாணவி அழைத்துச் சென்று முன் வரிசையில் இருத்தினார். என்ன அதிசயம் ! ஆசிரியையிடம் காணப்படும் பண்பும் அடக்கமும் மரியாதையும் அவரின் மாணவர்களிடமும் கண்டேன். மகிழ்ந்தேன்.

அழகாக எளிமையாக அமைந்திருந்த மண்டபத்தில் வழமைபோல் நடராஜ பூசையைத் தொடர்ந்து திரு.ஜெகதீஸ்வரனின் வரவேற்புரை நடைபெற்றது. தொடர்ந்து (Dip.in.Music) மதுரக்குரலோன் எஸ். கண்ணன் அவர்களின் விநாயகர் பாடலுடன் அரங்கேற்றம் ஆரம்பமானது. வித்தியாசமாக இன்னிசை செல்வன் என்.கே ரகுநாதனின் நாதஸ்வரத்துடனும் தவில் வித்வான் கே .பி.கேசவனின் தவில் இசையுடன் கம்பீரநாட்டை ராகத்தில் புஸ்பாஞ்சலியை மிகபக்திச்சிரத்தையுடன் டியானி ஆடியதை கவனிக்க முடிந்தது.

தொடர்ந்து தோடயமங்களத்தையும் உற்சாகத்துடன் ஆடியபோது அரங்கம் களைகட்டியிருந்தது..மீண்டும் கல்யாணி ராகத்தில் அமைந்த ஜதிஸ்வரத்தை மிக விறு விறுப்பாக ஆடினார் ...மிகப் பதுமையாகப் பேசும் ஆசிரியை துஸ்யந்தி அவர்களின் குரலில் ஜதிக்கோர்வைகள் மிக அற்புதமாக வெளிப்பட்டன. அடுத்து அரங்கேற்றத்தின் முக்கிய கட்டமான வர்ணத்தை இருபத்தைந்து நிமிடங்கள் செல்வி டியானி எவ்வித பிசகுமின்றி மிக அற்புதமாக ஆடி சபையைக் கவர்ந்திருந்தார்.

பரதசூடாமணி துஸ்யந்தி ஆசிரியையின் பிரமாதமான நட்டுவாங்கமும் சங்கீதரத்தினம் (Dip. In .Music) எஸ். பிரணவநாதன் அவர்களின் மிருதங்க ஜதியும் போட்டி போட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு ஈடு கொடுத்து எவ்வித களைப்பும் தெரியாமல் ஜதிக் கோர்வைகளை மிக விறு விறுப்பாக ஆடியது டியானியின் நீண்ட கால மேடைஅனுபவத்தை வெளிப்படுத்தியதாகவே தோன்றியது. வர்ணத்தில் சஞ்சாரி பாவத்தை வர்ணத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் மிக அழகாகவே செய்திருந்தார் ..அத்துடன் நவரச பாவங்களை மிக தத்ருபமாக வெளிப்படுத்தினார்...இங்கு நெய்வேலி.எஸ் ராதாகிருஷ்ணனின் வயலின் இசை பற்றிக் குறிப்பிடாமல் நகரமுடியாது. மகுடி வாசித்துப் பாம்பை மயக்குவது போல் அவர் வயலின் வாசித்து சபையோரை மயக்கிவிட்டார்.

அடுத்து அறிவிப்புத் துறையில் பல தசாப்தங்களை கடந்த அறிவிப்பாளர் திரு .வலன்ரைன் அவர்கள் டொச் மொழியிலும். லண்டன் தமிழ் வானொலியின் அறிவிப்பாளரும் பல நூறு மேடைகளைக் கண்டவருமான செல்வி வேதிகா. ஜெகதீஸ்வரன் தமிழிலும் அழகாகக் கலைஞர்களை அறிமுகம் செய்ததுடன் நிகழ்ச்சிகளை மிக கம்பீரமான குரலில் விளக்கங்களுடனும் அறிவிப்புகளை செய்திருந்தனர்.குருவினதும் சிஷ்யையினதும் இசை ஆசிரியரான இசைக்கலைமாமணி தர்மினி. தில்லைநாதன் அவர்கள் வாழ்துரையில் இவர்களது குருபக்தியும் கலை மேல் கொண்ட பக்திச்சிரத்தையுமே இன்று இவர்களது மேன்மைக்கு காரணமாக இருந்தது என்று தெரிவித்ததுடன் மென் மேலும் கலை உலகில் பிரகாசிக்க வாழ்த்துகளை தெரிவித்தார்.

தொடரந்த நிகழ்ச்சிகளில் டியானியின் முகத்தில் முதல் பகுதியில் காணாத ஒரு புன்னகையையும் மகிழ்ச்சியையும் காணமுடிந்தது. பாகீஸ்வரி ராக பதத்திலும் அடுத்து வந்த இராகமாளிகை கீர்த்தனையிலும் பக்திரசம் கருணைரசம் போன்ற நிறைவான பாவங்களையும் அபிநயங்களையும் வெளிப்படுத்தியதுடன் அசைந்து நெளிந்து லாவகமாக ஆடி ரசிகர்களின் மனதில் இடம் பிடித்துக் கொண்டார்.அதிகமான அரங்கேற்றங்களில் விடுபட்டுப் போன ஜாவளியை டியானி அழகாக அபிநயித்து ஆடியபோது இந்த சிறு வயதில் அவர் பெற்ற நிறைவான அனுபவத்தைக் காண முடிந்தது. ..அதுபோல் காவடிச்சிந்தை மிக ஒய்யாரமாக ஆடிப் பலத்த கரகோஷ த்தைப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து ஆடிய விடுதலை நடனத்தில் ஆடகி கோபத்தில் சீறும் பாவத்தை வெளிப்படுத்தியபோது ..அவர் கண்கள் நிஜமாகவே கோபக் கனல் வீசின. இறுதியாக ஷிந்தோள ராக தில்லானாவை மிக விறு விறுப்பாக ஆரம்பத்தில் இருந்த அதே உத்வேகத்துடன் ஆடிச் சபையோரின் அங்கீகாரத்தைப் பெற்றார்.

குருவும் ஆசிரியருமான துஷ்யந்தி ஜெகதீஸ்வரன் அவர்கள் அற்புதமாக இச் சிறுவயதிலேயே டியானியை கலாஜோதி பட்டத்தையும் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக்கொள்ள வைத்ததுடன் கலைத்துறைக்கு ஒரு நல்ல வாரிசை தந்துள்ளமை போற்றுதற்குரியதாகும்.
இக் கருத்துப்படியே பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பரதசூடாமணி கௌசலா.ஆனந்தராஜா அவர்கள் பாராட்டி பேசியதுடன் குருவையும் சிஷ்யையையும் பொன்னாடை போர்த்தி கௌரவித்து பரிசில்கள் வழங்கினார்

கௌரவ விருந்தினராக நாட்டிய கலைமாமணி பிரமிளா. ரவீந்திரன் அவர்களும்சிறப்பு விருந்தினராக நாட்டிய கலைமாமணி விமலா.சூரியதாஸ் அவர்களும் கலந்துபாராட்டுகளைத் தெரிவித்தனர்.

இறுதியாக அரங்கேற்றநாயகி தன் குருவையும் பக்கவாத்திய கலைஞர்களையும் கௌரவித்ததுடன் தன் பெற்றோரையும் கௌரவித்தபோது கரகோஷம் அரங்கத்தை நிறைத்தது.

வாழ்க கலை
வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழினம்

கலைவாணிஏகானந்தராஜா
(சங்கீத டிப்ளோமா)
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் வெள்ளி விழா




ஐரோப்பியரீதியில் 61க்கும் மேற்பட்ட தமிழ்ப்பாடசாலைகளை உள்ளடக்கிப் பிரதிநிதித்துவப்படுத்திக் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக யேர்மனியில் இயங்கிவரும் யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் 25வது ஆண்டுநிறைவுவிழாவும் பரிசளிப்புவிழாவும் கடந்த 14.06.14ந்திகதி 15மணியளவில் Diedich kreuning Haus, Leopold strasse.50-58, 44147 Dortmund என்றமுகவரியலமைந்த பிரமாண்டமான மண்டபத்தில் யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் தலைவர் திரு. சிறிஜீகன் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. தமிழகத்திலிருந்த வருகைதந்து பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞரான இலக்கியச்சுடர் திரு. த. இராமலிங்கம் அவர்கள் மங்கல விளக்கினை ஏற்றிவைத்ததினைத்தொடர்ந்து, போரினாலும் தாயகத்தில்இனப்பிரச்சினையாலும் உயிர்நீத்த எம்தமிழ் உறவுகளின் ஆத்மசாந்திக்காக இருநிமிட மௌனஅஞ்சலிஅனுஷ்டிக்கப்பட்டதனை அடுத்துநிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

கல்விச்சேவைக் கீதத்தினை டோர்மூண்ட் வள்ளுவர்தமிழ்ப் பாடசாலைமாணவிகள் ஐவர் இணைந்து இசைத்தனர். தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தினை வள்ளுவர் தமிழ்ப் பாடசாலைமாணவியான செல்வி. ரஜீவா சிறிஜீகனும் சங்கீத ஆசிரியை திருமதி.ஞானாம்பாள் விஜயகுமாரும் பாடினர். தொடர்ந்து யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் செயற்குழ உறுப்பினர்களில் ஒருவாரான திருமதி கிளி சிறிஜீகன் வரவேற்புரையினை நிகழ்த்தினார். பிரமாண்டமான திருவள்ளுவரின் அழகிய வர்ணப்படத்துடன் அமைந்த யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் பஞ்சவர்ணப் பதாகை அரங்கை அலங்கரிக்க மாணவர்களின் மகிழ்ச்சிவெள்ளத்துடன் நிகழ்வுகள் களைகட்டத்தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலை காரணமாகவும் அதனால் ஏற்பட்ட போக்குவரத்து அசௌகரியங்களினாலும் குறிப்பிட்ட நேரத்துக்கு பலபாடசாலைகளினால் சமுகம்தர முடியாவிடிலும் சற்றுத்தாமதமாகிய வருகையினால் சில நிகழ்ச்சிகள் அவர்களின் வருகைக்கேற்ப விரைந்து அரங்கேறின. என்றாலும் தொய்வின்றி நிகழ்ச்சிகளை விழாக்குழு நடாத்திக்கொண்டிருந்தமையைக் காணமுடிந்தது. அடுத்து நெதர்லாந்து - பேவேர்விக் கலை மகள் தமிழ்ப்பாசாலை ஆசிரியையான திருமதி.கமலாதேவி வடிவேல் அவர்கள் கருத்துரை வழங்கியதைத் தொடர்ந்து நெதர்லாந்து- அல்க்மார் முத்தமிழ்மன்ற தமிழ்ப் பாடசாலைமாணவ சகோதரிகள் மூவரின் ஒரு இசைப்பாடல் இடம்பெற்றது.

அடுத்த நிகழ்ச்சியாக யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் உபதலைவர் திருமதி கலா மகேந்திரன் அவர்கள் சிற்றுரை வழங்கினார். இதனையடுத்து ஒபகௌசன்-அறிவாலயம் தமிழ்ப்பாடசாலை மாணவர்கள் பங்கேற்ற தமிழே என் முகவரி என்ற குறுநாடகம் இடம்பெற்றது. ஒலிவாங்கியின் சீரற்ற தன்மையால் உரையாடல்கள் தெளிவில்லாமலிருந்தமை பார்வையார்களுக்கு முழுமையாக அந்நாடகத்தினை இரசிக்கமுடியாதிருந்தது. தொடர்ந்த ஆசிரியர் கருத்தரை வரிசையில் டோர்முண்ட்-தமிழர்கலையகம் தமிழ்ப்பாடசாலை ஆசிரியை திருமதி ஜெகதீஸ்வரி மகேந்திரன் அவர்களின் சிற்றுரை இடம்பெற்றது. தொடர்ந்த நிகழ்வாக யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் பழைய மாணவிகளான செல்விகள் பானுரதி புவனேந்திரன் மற்றும் ரஜீவா சிறிஜீவகன் இருவரும் இணைந்து வழங்கிய அழகிய நடனம் இடம்பெற்று அனேகரின் பாராட்டுக்களைச் சுவீகரித்தது.

தொடாந்த ஆசிரியர் கருத்துரை வரிசையில் படவோர்ண் - அகரம் தமிழ்ப் பாடசாலை ஆசிரியை திருமதி பத்மாசினி மாணிக்கரத்தினம் அவர்கள் கருத்துரை வழங்கினார். தொடர்ந்து டோர்மூண்ட் வள்ளுவர்தமிழ்ப் பாடசாலைமாணவிகள் பாரதியின் சில முக்கிய பாடல்களை வயலினிசையாக வழங்கினர்.இசையாசிரியர் திரு.கந்தையா பாஸ்கரன் அவர்களின் இசைவகுப்பு மாணவர்கள் என்பதை இங்கே குறிப்பிடுதல் பொருத்தமாயிருக்கும் என்று நம்புகிறேன். தொடர்ந்த ஆசிரியர் கருத்துரையில் நெதர்லாந்து அல்க்மார் முத்தமிழ்மன்றச் செயலாளர். திரு.ஜெயம் தங்கராசா அவர்கள் தம்கருத்தினை சுருக்கமாக நிறைவேற்றினார். விரைந்து நடந்துகொண்டிருந்த நிகழ்ச்சிகளை கல்விச் சேவையின் செயற்குழ உறுப்பினர்கள் மும்முரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டுக்கொண்டிருந்தமையை காணக்கூடியதாவிருந்தது. டோர்மூண்ட்-தமிழர்கலையகம் தமிழ்ப்பாடசாலை மாணவர்கள் பங்கேற்ற வாத்திய இசைக்கச்சேரி அடுத்த நிகழ்வாக இடம்பெற்று சபையைக் கட்டிப்போட்டது. கருத்துரை வழங்கியோர் வரிசையில் கல்விச் சேவையின் செயற்குழ உறுப்பினர்களில் ஒருவரும் முன்னாள் ஆசிரிய ஆலோசகருமான திருமதி சந்திரகௌரி சிவபாலன் அவர்கள் உரையாற்றினார். முன்ஸ்ரர் - கலைவாணி தமிழ்ப்பாடசாலை மாணவர்கள் 11 பேர் நிகழ்த்திய பட்டிமன்றம் நடைபெற்றது. குழந்தைகளின் முன்னேற்றத்தக்குத் துணையாகவிருப்பது தாயா? தந்தையா என்ற தலைப்பிலான பட்டிமன்றம் மிகவும் சுவாரஸ்யமாகவும் ரசிக்கும்படியாகவுமமைந்த இந்நிகழ்வு பலராலும் பராட்டப்பட்டது.



அதனைத்தொடர்ந்து முன்ஸ்ரர் கலைவாணி தமிழ்ப்பாடசாலையின் ஆசிரியர்களில் ஒருவரான திரு.கனகசுந்தரம் அவர்கள் அம்மாணவர்களை வாழ்த்தியும் தன்கருத்துரையையும் வழங்கினார். தொடர்ந்த நிகழ்வில் சங்கீத ஆசிரியைகளான திருமதிகள். ஞானாம்பாள் விஜயகுமார் , மீரா நித்தியானந்தன் , வத்சலா கனகசுந்தரம் ஆகியோரின் பாடல்களுக்கு வயலின் ஆசிரியரான திரு.கந்தையா பாஸ்கரன் அவர்கள்வழங்கிய வயலின்பின்னணி இசையுடனான இசைக்கதம்பம் இடம்பெற்றது. அடுத்து மாணவர்களின் நிகழ்ச்சியாக படவோர்ண்-நகர அகரம் தமிழ்ப் பாடசாலைமாணவர்களின் விசைப்பலகை இசைச்சங்கமம் இடம்பெறுவதற்கான ஆயத்த இணைப்புகள் மேடையில் ஒருங்கமைப்புச் செய்து கொண்டிருந்த வேளையில் நெதர்லாந்து-பேவேர்விக் கலை மகள்தமிழ்ப்பாடசாலை ஆசிரியையான திருமதி.கமலாதேவி வடிவேல் அவர்களும் மாணவன் கஜநாதன் லெட்சுமணனும் நடித்துக்காட்டிய சுட்ட பழமா!..சுடாத பழமா!...நாடகம் இடம் பெற்றதென்றாலும் நேரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் விழுங்கிக்கொண்டதால் சபையோருக்கு சலிப்பேற்பட்டதைக் காணமுடிந்தது. இந்நிகழ்வோடு இணைவாக யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் 25வது ஆண்டுநிறைவு மலர்வெளியீடு இடம்பெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞரான இலக்கியச்சுடர் திரு.த.இராமலிங்கம் அவர்கள் மலரை அவர்கள்வெளியிட திருமதி. கமலாதேவி வடிவேல் அவர்கள் முதல்பிரதியைப் பெற்றுக்கொள்ள: நூல் தயாரிப்புக்கு அனுசரணை வழங்கிவர்களுள் ஒருவரான ஓம் நமஸ்தே நிறுவன உரிமையாளர் திரு.சிவகுமார் அவர்கள் 2வது பிரதியைப் பெற்றுக்கொள்ள விழா மலர் வெளியீடு நிறைவுபெற்றதைத்தொடர்ந்து விசைப்பலகை இசைக்கதம்பம் நடைபெற்றது. இவ்வேளையில் பார்வையாளர்கள் நூலைப்பெறும் பொருட்டு பழையமாணவர் மன்ற உறுப்பிர்கள் நூல்களை விநியோகம் செய்துகொண்டிருந்த மையைக்காணமுடிந்தது விரைந்து நிகழ்வுகள் இடம்பெற்றதால் நேரம் போனது தெரியவில்லை.

இடைவேளை 20 நிமிடங்கள் என்று அறிவிக்கப்பட்டபோதே நேரம் 20 மணியைத்தாண்டியது தெரிந்தது. இடைவேளை நிறைவுபெற்றபின் கலைநிகழ்வுகளை நிகழ்த்திய மாணவர்களை ஊக்கப்படுத்துவதிலும் பாராட்டுவதிலும் பின்னிற்காத யேர்மன் தமிழ் கல்விச்சேவையானது மாணவர்களுக்கு நிகழ்ச்சிகளின் நிறைவின்போது நினைவுப்பரிசில்களை வழங்கி வாழ்த்திக்கொண்டேயிருந்த விடயம் மிகவும் வரவேற்புக்குரியது. மேலும் சங்கீத ஆசிரியைகளின் இசைக்கதம்பம் நிகழ்ச்சியில் சிறுதடங்கல்களால் இணைந்து கொள்ளமுடியாத சங்கீத ஆசிரியை திருமதி. கலைவாணி ஏகானந்தராஜா அவர்கள் தனியாக ஒரு இசை நிகழ்ச்சியைத்தந்தார் தொடர்ந்து சிறப்புவிருந்தினர் உரை இடம்பெற்றது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞரான இலக்கியச்சுடர் திரு.த.இராமலிங்கம் அவர்கள் நேரத்தின் அவசியம் கருதி 20 நிமிடத்துள் தன் சிறப்புரையை இரத்தினச் சுருக்கமாக நிகழ்த்தினார். சிந்திக்கத்தூண்டிய அவரின்உரையினைத்தொடர்ந்து சிறப்புவிருந்தினருக்கான கௌரவிப்பு நடைபெற்றது. யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் தலைவர் திரு. பொன். சிறிஜீகன் அவர்கள் திரு.த இராமலிங்கம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி மாலையணிவித்து மரியாதைசெய்ததுடன் திருவள்ளுவர் உருவப்படம் பொறிக்கப்பட்ட நினைவுக் கேடயத்தைக் கையளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.மண்டபமே அதிர்ந்த கரகோசத்தோடு அனைவரும் எழுந்து நின்று மரியாதைசெய்த காட்சிஅவர்மேல்கொண்ட அபிமானத்தையும் கல்வியில் அவர்கொண்ட மரியாதையையும் வெளிப்படுத்தியதெனலாம். தொடர்ந்து ஆனந்தக்கலகலப்பு மாறாத தருணத்தோடு யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் செயற்குழ உறுப்பினர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டு கல்விச்சேவையின் தலைவர் திரு. பொன். சிறிஜீகன் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். மேலும் கருத்துரை வழங்குவோர் வரிசை நீளத்தொடங்கியது. சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.நடராஜா பார்த்திபன் அவர்களின் சிறப்புரை இடம்பெற்றது. அதனையடுத்து ஆன்ஸ்பேர்க் நல்லாயன் தமிழ்ப்பாடசாலை மாணவர்களின் நடனம் ஒன்று இடம்பெற்றதனையடுத்து அப்பாடசாலையின் ஆசிரியர்களில் ஒருவரான செல்வி கேமந்தினி நவரெத்தினம் அவர்களின் வாழ்த்துக்கவிதை இடம்பெற்றது. நேரத்தையும் தூர இடங்களில் இருந்து வந்தவர்களையும் மனதில்கொண்டு நிகழ்ச்சி விரைவாக நடைபெற்ற போதும் 22மணியைக் கடிகாரங்கள் காட்டிக்கொண்டிருந்தன.

அடுத்த வாழ்த்துரையை நிகழ்த்தவந்தவருள் யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் செயற்குழ உறுப்பினர்களில் ஒருவரும் மண் இலக்கிய சஞ்சிகை ஆசிரியருமான திரு.வ.சிவராசா அவர்கள் சிற்றுரையாகத்தன் கருத்ததுக்களை தெரிவித்ததோடு மண் இலக்கிய சஞ்சிகையின் சார்பில் தலைவர் திரு. பொன். சிறிஜீகன் அவர்களுக்கு மாலையணிவித்து பொன்னாடைபோர்த்தி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தொடர்ந்து யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளரும் சுண்டன் தமிழ்ப்பாடசாலையின் பொறுப்பாசிரியருமான திரு.பொன்:புத்திசிகாமணி அவர்கள் தன்கருத்துக்களையும் தன்வாழ்த்துக்களையும் தெரிவித்ததோடு ஒபகௌசன் அறிவாலயம் தமிழ்ப்பாடசாலையின் ஆசிரியரும் யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொருளாருமான திரு. அம்பலவன் புவனேந்திரன் அவர்களை ஆசிரியர் கருத்துரை வழங்குமாறு பணித்தார். நேரச்சுருக்கம் காரணமாக அவர்தன்கருத்தரையை வழங்குவதற்குப்பதிலாக யேர்மன் தமிழ் எழுத்தானர் சங்கத்தின் உறுப்பினர்கள்சார்பில் யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் தலைவர் திரு. பொன். சிறிஜீகன் அவர்களை வாழ்த்திக் கவிதையொன்றை வாசித்ததுடன் "செந்தமிழ்ழர்தி" என்ற பட்டத்தினயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழங்குவதாக அறிவித்தபோது விழாவில் கலந்துகொண்ட தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் மேடையிலிருந்தனர். அந்த சமூகத்தில் திரு. சிறிஜீகன் அவர்களுக்கு திரு. புவனேந்திரன் அவர்களால் "செந்தமிழ்ஆர்த்தி" என்று பொறிக்கப்பட்ட அழகியபட்டி அணிவிக்கப்பட்டபோது சபையே எழுந்து நின்று கரகோஷம் செய்தது. இதனையடுத்து யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் தலைவர் திரு. பொன். சிறிஜீகன் அவர்கள் தலைவர் உரையை மிகமிகச்சுரக்கமாகத் தெரிவித்ததுடன் ஆசிரியர் கௌரவிப்புக்காக விழாவில் கலந்துகொண்ட தமிழ் ஆசிரியர்களை மேடைக்கு அழைத்து அறிமுகம் செய்ததுடன் சிறப்புப்பட்டையங்களை தன்கரங்களால் வழங்கி மரியாதை செய்தார். மேடைநிறைந்த ஆசிரியர் குழாம் அரங்கை அலங்கரிக்க, ஐரோப்பிய ரீதியில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களையும் சிறப்புப் பரிசுகளைப்பெற்ற மாணவர்களுக்கான பெயர்ப்பட்டியல் வாசிக்கப்பட்டதனைத்தொடர்ந்து பெருமிதத்தோடு அவர்கள் மேடையேறிப் பரிசுக்டேயங்களைப் பெற்றகாட்சி மனதுக்கு மிகமகிழ்ச்சியையை அனைவருக்கும் ஏற்படுத்தியமையை கரகோஷங்கள் சாட்சிபகன்றன. துரிதமாக நிகழ்ந்த இறுதிக்கட்ட நிகழ்ச்சியான நன்றியுரையினை யேர்மன் தமிழ் கல்விச்சேவையின் தலைவர் திரு. பொன். சிறிஜீகன் அவர்கள் நிகழ்த்தியதனைத்தொடர்ந்து அந்தப்பிரமாண்டமான நிகழ்வுநிறைவுக்குவந்தது.

மண் கலையிலக்கிய சஞ்சிகைக்காக
யேர்மனியிலிருந்து
கவிச்சுடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை ஜீவாவிற்கு 88 வயது.



இலங்கையின் மூத்த எழுத்தாளரும் 45 வருடங்களுக்கும் மேலாக Dominicjeeva தொடர்ந்து மல்லிகை கலை இலக்கிய மாத இதழை வெளியிட்ட அதன் ஆசிரியருமான டொமினிக்ஜீவாவுக்கு 2014 ஜூன் 27 ஆம் திகதி 88 வயது பிறக்கிறது.

1927 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்த டொமினிக்ஜீவா முதலில் சிறுகதை எழுத்தாளராகவே இலக்கியத்துறையில் பிரவேசித்தவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு தமக்கு நாளாந்தம் வருவாய்தரும் தொழிலையும் கைவிட்டு முழுநேர எழுத்தாளராக பல தசாப்தகாலமாக அயராமல் உழைத்தார்.

இலங்கையில் கலாசார அமைச்சின் சாகித்திய மண்டலம் உருவானதும் தனது தண்ணீரும் கண்ணீரும் முதலாவது சிறுகதைத்தொகுதிக்காக சாகித்திய விருதும் பெற்றார்.

இலங்கையில் தமிழ் இலக்கியத்தில் சிறுகதைக்காக முதல் முதலில் சாகித்திய விருது பெற்றவரும் டொமினிக் ஜீவா என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் முதலில் கஸ்தூரியார் வீதியிலிருந்தும் பின்னர் காங்கேசன்துறை வீதியில் ஒரு ஒழுங்கைக்குள்ளும் இருந்து பல வருடங்களாக வெளியான மல்லிகை மாத இதழ் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கியிருக்கிறது.இலங்கையில் நாடுபூராகவும் தெருத்தெருவாக அலைந்து மல்லிகையை விநியோகித்து தமிழ் இலக்கியத்தை வளர்த்தவர் அதன் ஊடாக ஏராளமான புதிய படைப்பாளிகளை அறிமுகப்படுத்தியவர் என்ற பெருமையும் ஜீவாவையே சாரும். அதனால் மல்லிகைஜீவா என்றே அழைக்கப்பட்டார்.

வடக்கில் போர்மூண்டிருந்த காலப்பகுதியிலும் அச்சுக்காகிதாதிகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவிய காலத்திலும் பாடசாலை அப்பியாசக்கொப்பித்தாள்களில் மல்லிகையை அச்சிட்டு வெளியிட்ட சாதனையாளர் மல்லிகை ஜீவா - பல நெருக்கடிகளுக்கு மத்தியில் கொழும்புக்கு இடம்பெயர்ந்து புறக்கோட்டை ஸ்ரீகதிரேசன் வீதியில் தொடர்ந்தும் பல வருடகாலமாக மல்லிகை இதழை வெளியிட்டுவந்தார். தமிழ்நாட்டிலும் தனது இலக்கியப்பணிகளை விரிவுபடுத்திய மல்லிகை ஜீவா - தமிழக படைப்பாளிகளையும் கௌரவிக்கும் நோக்கத்தில் பலரது படங்களை மல்லிகையின் முகப்பில் பதிவுசெய்து இலங்கை - தமிழக இலக்கிய உறவுப்பாலத்தை உருவாக்கினார்.

அதற்காக பல தடவைகள் தமிழ்நாட்டிற்கு பயணித்திருக்கும் ஜீவா - சோவியத்தின் அழைப்பினை ஏற்று மாஸ்கோவுக்கும் ஐரோப்பாவில் இயங்கும் இலக்கியச்சந்திப்பின் அழைப்பை ஏற்று பிரான்ஸ் - இங்கிலாந்து முதலான நாடுகளுக்கும் பயணித்திருக்கிறார்.ஜீவாவின் சிறுகதைகள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவரது சுயசரிதையை Undrawn Portrait For Unwritten Poetry என்னும் பெயரில் அவுஸ்திரேலியாவில் வதியும் மொழிபெயர்ப்பாளர் நல்லைக்குமரன் குமாராசாமி ஆங்கிலத்தில் மொழிபெயர்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகையில் ஏராளமான சிங்களச்சிறுகதைகள் மற்றும் பிறமொழிக்கதைகள் கட்டுரைகளின் தமிழ்மொழி பெயர்ப்புகளுக்கு களம் வழங்கியிருக்கும் மல்லிகை ஜீவா - தேசிய இனங்களின் நல்லிணக்கத்திற்கும் சர்வதேச சகோதரத்துவப்பண்புகளுக்கும் முன்னுதாரணமாக விளங்கியவர்.இலங்கையில் பல இளம் எழுத்தாளர்களை மல்லிகை ஊடாக இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளார். நீர்கொழும்பு - திக்குவல்லை - அநுராதபுரம் - முல்லைத்தீவு - மலையக மல்லிகை சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ள ஜீவா அவுஸ்திரேலியா சிறப்பு மலரையும் வெளியிட்டவர்.Mallikai Australia Malar

இலங்கையில் சாகித்திய விருது மற்றும் சாகித்திய ரத்தினா - தேசத்தின் கண் ஆகிய சிறப்பு விருதுகளையும் பெற்றுள்ள ஜீவாவின் வாழ்வும் பணியும் பற்றி ஏற்கனவே திக்குவல்லை கமால் மற்றும் முருகபூபதி ஆகியோர் பல நூல்களும் எழுதியுள்ளனர்.சமீபத்தில் இலங்கையின் மூத்த எழுத்தாளரும் மல்லிகை ஜீவாவின் அபிமானியுமான தெணியான் தினக்குரல் வார இதழில் எழுதிய மனசோடு பழகும் மல்லிகை என்னும் கட்டுரைத்தொடர் தற்பொழுது முழுமையான நூலக வெளிவந்துள்ளது. இந்நூலின் வெளியீட்டு அரங்கும் எழுத்தாளர் ஒன்று கூடலும் மல்லிகை ஜீவா பிறந்ததினத்தை கொண்டாடு முகமாக 2014 யூன் 27 ஆம் திகதி கொழும்பில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண சிறிய மண்டபத்தில் நடைபெற்றது. பேராசிரியர் சபா . ஜெயராசாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புரவலர் ஹாஸிம் உமர் நூலின் முதல்பிரதியை பெற்றுக்கொண்டார். ஜீவாவின் மகன் திலீபன் டொமினிக்ஜீவா நன்றியுரையாற்றினார்.

மல்லிகையினால் 1970 களில் அறிமுகப்படுத்தப்பட்ட கவிஞர் மேமன்கவி இந்நிகழ்ச்சிகளை தொகுத்தளித்தார்.தமது 88 வயதில் காலடி எடுத்துவைக்கும் மல்லிகை ஜீவா நல்லாரோக்கியத்துடன் இலக்கிய அரங்கில் தொடர்ந்து இயங்கிவரவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

முருகபூபதி-அவுஸ்திரேலியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை ஜீவாவிற்குச் சாதனை விருது. –

## கனடா தமிழ் இலக்கியத்தோட்டத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது

இலங்கையின் மூத்த எழுத்தாளரும் 45 வருடங்களுக்கும் மேலாக Tamil Ilakkiya Thottam Functio தொடர்ந்து மல்லிகை கலை இலக்கிய மாத இதழை வெளியிட்ட அதன் ஆசிரியருமான டொமினிக்ஜீவாவுக்கு கடந்த ஜூன் 27 ஆம் திகதி 88 வயது பிறந்தது. அவரது நீண்ட கால தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி கௌரவிக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருதினை கனடாவிலிருந்து பல வருடகாலமாக இயங்கும் தமிழ் இலக்கியத்தோட்டம் வாழ்நாள் சாதனையாளர் சிறப்பு விருதினை கடந்த வியாழக்கிழமை மாலை கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் அவருக்கு வழங்கியது.

இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காக கனடா இலக்கியத்தோட்டம் அமைப்பின் பிரதிநிதி முன்னாள் பூரணி காலாண்டிதழின் இணை ஆசிரியர் திரு. என்.கே. மகாலிங்கம் இலங்கைவந்திருந்து கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடந்த விருதுவழங்கும் நிகழ்வில் திரு. டொமினிக் ஜீவா அவர்களுக்கு வழங்கினார். கனேடிய நாணய பெறுமதியில் இரண்டாயிரத்து ஐநூறு வெள்ளிகளுடன் சிறப்புக்கேடயமும் திரு. டொமினிக்ஜீவாவுக்கு வழங்கப்பட்டது.

தகைகமைசார் பேராசிரியர்கள் எஸ்.தில்லைநாதன், மௌனகுரு, சபா.ஜெயராசா, படைப்பிலக்கியவாதிகள் தெளிவத்தை ஜோசப், திக்குவல்லை கமால், கவிஞர் மேமன்கவி கமால் பெரேரா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

டொமினிக்ஜீவாவுக்கு வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் இயல் Tamil Ilakkiya Thottam Function விருது வழங்கப்பட்டிருப்பதை முன்னிட்டு கனடாவில் வெளியாகும் காலம் இதழ் சிறப்பு மலர் வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தகுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது 88 வயதில் காலடி எடுத்து வைத்துள்ள மல்லிகை ஜீவா நல்லாரோக்கியத்துடன் இலக்கிய அரங்கில்தொடர்ந்து இயங்கிவரவேண்டும் என கனேடிய தமிழ் இலக்கியத் தோட்டம் வாழ்நாள் சாதனையாளர் சிறப்பு விருது வழங்கப்படும் வேளை வாழ்த்துகின்றோம்.

நீண்ட காலம் இலக்கியமே உயிர்மூச்சாக வாழ்ந்து கொண்டிருக்கும் மல்லிகை ஜீவா அவர்களுக்கு வாழ்நாள் இலக்கிய சாதனையாளர் விருதினை வழங்க முன்வந்த கனடா இலக்கியத்தோட்டம் அமைப்பிற்கும் அந்த அமைப்பின் ஸ்தாபகர் மற்றும் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் எமது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்வதுடன் கனடா இலக்கியத்தோட்டம் தொடர்ந்தும் பல இலக்கியப்பணிகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.

தகவல்: முருகபூபதி-அவுஸ்திரேலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவீஸ் செய்திகள்.

விவேகானந்தன்
சுவீஸ்.

சுவிட்சர்லாந்தில் 13 நபர்களுக்கு ஒருவர் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்வதாக புள்ளி விவரம் ஒன்றில் தெரிவிக்கபட்டுள்ளது.கடந்த2012ம் ஆண்டில் சுவிசில் சுமார் 5,90,000 மக்கள் வறுமை கோட்டிற் கீழ்வாழ்வதாக மத்திய புள்ளி விவரத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.ஆனால் இதனை கடந்த 2007ம் ஆண்டுடன் ஒப்பிடுக்கையில் 1.6 சதவீதம் குறைந்துள்ளதாக கூறப்படுகிறது.மேலும்நபர் ஒருவருக்கு 2200 பிராங்கும், குடும்பத்துடன் வாழ்பவருக்கு 4050பிராங்கும் இருக்கும் மக்களை வறுமை கோட்டிற்கு கிழே உள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர்.

சுவீஸ் வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கியுள்ள கறுப்பு பணம் தொடர்பாக ஆலோசனை நடத்தவருமாறு இந்திய அதிகாரிகளுக்கு அந்நாட்டின் அரசு அழைப்பு விடுத்துள்ளது.வெளிநாடுகளில்கறுப்பு பணம் பதுக்கியுள்ள இந்தியர்கள் குறித்த பட்டியலை ஜேர்மனி,பிரான்ஸ் போன்ற நாடுகள்மூலமாக மத்திய அரசு பெற்றிருந்தது.ஆனால் அந்த பட்டியல் அடிப்படையில் தகவல்களை பகிர்ந்துகொள்ள சுவிஸ் நிதிதுறை அதிகாரிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.இந்நிலையில் அந்நாட்டு நிதித்துறை அதிகாரிகள் தலைநகர் பெர்னுக்கு வருமாறு இந்திய அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இதனால் கறுப்புப் பணம் மீட்பு விவகாரம் மீண்டும் சூடுபிடித்துள்ளது.மேலும்கறுப்புபணத்தை மீட்பதற்காக உச்சநீதிமன்றம் பரிந்துரை அடிப்படையில் முன்னாள்நீதிபதி எம்பிஷாதலைமையில் மத்திய அரசு குழ அமைத்ததால் தற்போதுமுன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாககூறப்ப டுகிறதுஇதற்கிடையே இந்திய கள்ளரூபாய் நோட்டுகள் சுவிசில் அதிகம் புழங்குவதாக அந்நாட்டு பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிசில் ஒரே ஒரு உயிரியல் பூங்காவில் மட்டுமே ஜெல்லிமீன்கள் காணப்படுவதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.சுவிசின் பேசல் மாகாணத்தில் உள்ள உயிரியல் பூங்காவில் மீன் காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.இந்த மீன் காட்சியகத்தில் காணப்படும் ஜெல்லி மீன்களை ஆடினன் பாப்ரிக்ஸ் என்ற பூங்காவின் கண்காணிப்பாளர் பராமரித்து வருகிறார். இதுகுறித்து அவர் கூறுகையில், எனது பிள்ளை பருவத்திலிருந்தே எனக்கு ஜெல்லி மீன்களைபாதுகாத்து வளப்பதில் மிகுந்த ஆர்வம் உண்டு என்றும் இது என் சிறு வயது முதல் உள்ள ஓர் கனவு ஆகும் எனவும் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைகள் பலவிதம்.

-சீனாவில் விடுதி (Hotel) ஒன்று 6.668 பேர் தங்கும் வசதிகளுடன் கட்டி உலகசாதனை படைக்கப்பட்டுள்ளது. சுமார் 1 லட்சம் சதுரமீட்டர் பரப்பில் பல வசதிகளுடன் உலகத்தரத்தில் இந்த விடுதி கட்டப்பட்டுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

-பிரித்தானியாவைச் சேர்ந்த இளம் தம்பதிகள் பெயர் ஸ்டீவ் - 34வயது கேட்ஸ் 32 வயது இவர்கள் 3 கண்டங்களைத் தாண்டி 18 நாடுகளுக்கான மிதிவண்டிப் பயணத்தை சுமார் 20.000 கிலோமீட்டர் மேற்கொண்டு நாடு திரும்பியுள்ளனர்.2012ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பித்த இவர்களின் பயணம் இம்மாதம் முடிவடைந்துள்ளது. கம்போடியா, அவுஸ்த்திரேலியா, மலேசிய, இந்தோனிஷியா நாடுகளில் தாம் கடும் இன்னல்களோடுதான் இச்சுற்றுப் பயணத்தை தாம் மெற்கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

-அமெரிக்காவில் 1719ம் ஆண்டு பாவிக்கப்பட்ட வயலின் இசைக்கருவி ஒன்று தற்போது ஏலவிற்பனையில் 45 மில்லியன் டொலருக்கு விற்பனையாகியுள்ளது.

-இந்தியா-கேரளா மாநிலத்தில் மலப்புரம் என்ற மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் 2008 ஆண்டு கணக்கெடுப்பின்படி 100 சோடி இரட்டையர்கள் வாழ்ந்ததாகவும் தற்போது 400 சோடி இரட்டையர்கள் வாழ்கிறார்கள் எனவும் புள்ளிவிபரம் ஒன்று கூறியுள்ளது.

-உலகில் தற்போது வயதுகூடிய பெண்மணியாக வியட்நாம் நாட்டைச் சேர்ந்தவர் முதலிடம் பிடித்துள்ளார். 4-5-1893ல் பிறந்த இவருக்குத் தற்போது வயது 121 ஆகும் இவரின் பெயர் நகுஜன் தா றன் (Nguyen Thu Tru)

-வீதிகளில் பொருத்தப்படும் மின்சார சமிக்கை விளக்குகள் பொருத்தப்பட்ட நிகழ்வு முதன் முதல் பிரித்தானியாவில்தான் ஆரம்பிக்கப்பட்டது. 5-8-1914 ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டது 100 வருடங்களை எட்டிப்பிடித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில்.

இந்தியாவின் மொத்தச் சனத்தொகை 122 கோடி (உலக சனத்தொகையில் 17,5%)
2014 தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானோர்: 814 மில்லியன் (81கோடி) புதிதாக வாக்களிகத் தகுதி பெற்றோர் 150 மில்லியன் (15 கோடி) இவர்களின் வயது: 18 - 23 வரை சனத்தொகையில் 35 வயதுக்குட் பட்டோர்: 2/3 பங்கு சனத்தொகையில் 25 வயதுக்குட்பட்டோர் 1/2 பங்கு இந்தியாவின் மத்திம வயது 29 வருடங்கள் சீனாவின் மத்திம வயது:37 வருடங்கள் rathan என்ற இலாப நோக்கற்ற கல்விப் பரிந்துரைக்குழுவின் தகவல்களின்படி இந்தியாவில் 7 வயதுடையவர்களில் அரைவாசிப் பேருக்கு எழுத்துக்களைப் புரிந்துகொள்ள முடியாது. 10 வயதுள்ளவர்களில் 5 பேர்களில் ஒருவருக்கு வாசிக்கத் தெரியாது. உற்பத்தித்துறையில் போதிய வேலைவாய்ப்புகள் இல்லாதபடியால், 2012இல் இருந்ததைவிடக் கூடுதலான மக்கள் 2019இல் விவசாயத்துறையில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
இவர்களும் சேர்ந்துதான் இந்திய ஜனநாயகம் தீர்மானிக்கப்படுகிறது!

- இந்தியாவில் வரதட்சனைக் கொடுமை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் 8.233 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 1 மணித்தியாலத்திற்கு ஒருவர் என்ற வீதத்தில் படுகொலை இடம்பெறுவதாக ஆய்வு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

- சுமார் 122 கோடி சனத்தொகை கொண்ட இந்தியாவில் தற்போது 6. 5 கோடி மக்கள் நவீன அடிமைகளாகக் காணப்படுகிறார்களாம். சாதியம் மற்றும் சமயங்களைச் சாட்டியும் கூலி வேலை, வறுமை, நோய், எனக்காணப்படும் பாமர மக்களே இப்படியா அடிமைத்தொழில் புரிகிறார்கள் எனத்தெரியவந்துள்ளது.

- இந்தியாவின் 29வது மாநிலமாக தெலுங்கானா மாநிலம் கடந்த 2-6-2014 அன்று தொடக்கம் இயங்கத் தொடங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியகுடும்பம் பேரின்பம்!அற்புத தம்பதியினர்!.

அமெரிக்காவில் தம்பதியினர் ஒருவர் 8 குழந்தைகளை ஆப்ரிகாவில் இருந்து தத்தெடுத்துள்ளது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்காவின் டென்னிஸி மாநிலத்தை சேர்ந்த ஹேலி-மைக் ஜோன்ஸ் தம்பதியினர் பெரிய குடும்பத்துடன் வாழ ஆசைப்பட்டனர். ஆனால் ஹேலியின் கர்ப்பப்பை பாதிக்கப்பட்டதால் குழந்தை பெற முடியாத சூழல் நேர்ந்துள்ளது.


இதனால் ஆப்ரிக்காவில் போரில் பாதிக்கப்பட்ட சிரியாவை மற்றும் ஆப்ரிக்காவை சேர்ந்த 8 குழந்தைகளை தத்தெடுத்துள்ளனர்.

தற்போது 5 முதல் 16 வயது வரை உள்ள அந்த குழந்தைகளை அரவணைத்து வளர்த்து வருகின்றனர்.

இதுகுறித்து தம்பதியினர் கூறுகையில், இக்குழந்தைகள் அனைத்தும் எங்களின் சொந்த குழந்தைகள் என்றும் இவர்களால் நாங்கள் ஆனந்தம் அடைந்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குழந்தைகளின் காலை சிற்றுண்டிக்கு மட்டும் 1 கேன் டீ, 36 முட்டைகள், 2 பவுண்டு இறைச்சிகள், 24 பிஸ்கெட்டுகள் மற்றும் 2 பெகான் பொட்டலங்கள் உள்ளிட்டவையை உட்கொள்வதாககுறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அருகில் உள்ள மக்கள் இந்த குடும்பத்தினருக்கு படுக்கை மற்றும் உடைகள் கொடுத்து உதவி செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக அகதிகள்.

உலகில் இடம்பெற்றுவரும் போர், உள்நாட்டுப்போர், மற்றும் இயற்கை அனர்த்தங்களால் தினமும் பல்லாயிரம் உயிர்கள் இழக்கப்படுவதுடன் அகதிகளாகும் மக்கள் தொகையும் அதிகரித்துவருவதாக அறியப்படுகின்றது. அந்த வகையில் தற்போது (2013 முடிவடைய) மிகக்கூடுதலான அகதிகள் வாழும் நாடுகளின் புள்ளிவிபரம் ஒன்றை ஐக்கியநாடுகள் சபையின் அகதிகள் பிரிவு வெளியிட்டுள்ளது.

உள்நாட்டில் அகதிகள்...

| | | |
|---|---|---|
| 01. ஆப்கானிஸ்தான் | -2.56 | மில்லியன |
| 02. சிரியா | - 2.47 | " |
| 03. சோமாலியா | - 1.12 | " |
| 04. தென்சூடான் | - 0.65 | " |
| 05. கொங்கோகுடியரசு | - 0.50 | " |
| 06. மியன்மார் | - 0.48 | " |
| 07. கொலம்பியா | - 0.40 | " |
| 08. ஈராக் | - 0.40 | " |
| 09. வியட்நாம் | - 0.31 | " |
| 10. எதித்திரியா | - 0.31 | " |

மொத்த அகதிகள்...

| | | |
|---|---|---|
| 01. பாக்கிஸ்தான | - 1.62 | மில்லியன் |
| 02. ஈராக் | - 0.86 | " |
| 03. லிபியா | - 0.86 | " |
| 04. ஜோர்தான் | - 0.64 | " |
| 05. துருக்கி | - 0.61 | " |
| 06. கென்யா | - 0.53 | " |
| 07. சாட்குடியரசு | - 0.43 | " |
| 08. எந்தியோப்பியா | - 0.43 | " |
| 09. சீனா | - 0.30 | " |
| 10. அமெரிக்கா | - 0.26 | " |

## அமெரிக்கப்படைகளின் இழப்பு.

உலக வல்லரசான அமெரிக்கா பல நாடுகளில் போர் தொடுத்ததால் தமது படைகளையும் இழந்திருக்கின்றது. மிகக்கூடுதலான இழப்புக்களைச் சந்தித்த சம்பவங்களை இங்கே காணலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1950ம் | ஆண்டு கொரியா யுத்தம் | - 37.000 | படையினர் | இறப்பு |
| 1965-1973 | ஆண்டு வியட்நாம் யுத்தம் | - 50.000 | " | " |
| 2001-2014 | ஆண்டு ஆப்கானிஸ்தான் யுத்தம் | - 2.300 | " | " |
| 2003-2014 | ஆண்டு ஈராக் யுத்தம் | - 5.000 | " | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட – கிழக்கிலும் ஊட்டச்சத்து குறைபாடு அதிகம்

இலங்கை சிறார்களில் மூவரில் ஒருவரும் வளர்ந்தவர்களில் நால்வரில் ஒருவரும் இரும்புச் சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் இரத்தச் சோகை நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஐநாவுடன் சேர்ந்து சுகாதார அமைச்சு நடத்தியிருந்த ஆய்வொன்றில் அண்மையில் தெரியவந்திருந்தது.இரும்புச் சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் இரத்தச் சோகையை ஒரு பொதுச் சுகாதாரப் பிரச்சனை என்று கூறியிருந்த சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, இரும்புச் சத்துக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதன் மூலம் நாட்டின் தேசிய உற்பத்தித் திறனை 20 வீதத்தால் அதிகரித்துக் கொள்ளமுடியும் என்றும் தெரிவித்திருந்தார்.இதனிடையே, மலையகத் தோட்டப்புறங்களிலும் வடக்கு கிழக்கில் முன்னாள் போர் வலயங்களிலுமே கூடுதலான சிறார்களும் கர்ப்பிணிப் பெண்களும் ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் இரத்தச் சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார துறை அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மலையகத்தில், குறிப்பாக நுவரெலியா மாவட்டத்திலும் வடக்கில் முன்னாள் போர் வலயப் பிரதேசமான கிளிநொச்சியிலும் சிறார்களிடத்தில் போஷாக்கின்மையும் இரத்தச்சோகையும் அதிகளவில் காணப்படுவதாக சுகாதார அமைச்சைச் சேர்ந்த சமுதாய மருத்துவ நிபுணர் டொக்டர் முரளி வல்லிபுரநாதன் கூறினார்.அண்மைய ஆய்வுத் தரவுகளின்படி, இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட சிறார்களில் 25 வீதமானோர் நிறை குறைந்த தன்மையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த நிலைமை 40 வீதத்துக்கும் அதிகமாக காணப்படுவதாக மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்தார். அதேபோல, நுவரெலியா மாவட்டத்தில் சிறார்கள் நால்வரில் ஒருவர் வளர்ச்சி குன்றிய நிலையில் காணப்படுவதாகவும் அவர் கூறினார். கர்ப்பிணித் தாய்மார் மரணம் தொடர்ச்சியாக நுவரெலியா மாவட்டத்திலேயே அதிகரித்த நிலையில் காணப்படுவதாகவும் மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்தார்.முன்னாள் போர் வலயங்களிலும் மலையகத் தோட்டப்புறங்களிலும் காணப்படும் வறுமை நிலையே அங்கு ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி பிறேசில் 2014

## FIFA-2014 WORLD CUP - BRASIL

உலகின் விளையாட்டுத்துறையில் உதைபந்தாட்டம் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. உலகில் மிக அதிகமான ரசிகர்களைக்கொண்டுள்ள இவ்விளையாட்டின் முக்கியத்துவம் உணரப்பட்டே உலக உதைபந்தாட்டச் சம்மேளனம் நான்கு வருடத்திற்கு ஒருதடவை உலகநாடுகளின் தலைசிறந்த அணிகளைத்தெரிவுசெய்து இறுதிப்போட்டிவரை நடாத்திப் பரிசு வழங்குகின்றது. அந்தவகையில்தான் 20வது உலககிண்ணக் கோப்பைக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் 12-06-2014 அன்று பிறேசில் நாட்டில் ஆரம்பமாகியது. 32 நாடுகள் 8 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழவிலும் 4 நாடுகள் பங்குகொண்டன. 13-07-2014 தேதியன்று இறுதிப்போட்டி நடைபெற்றது...இந்த உலககிண்ணப் போட்டிபற்றிய சிறுகுறிப்பை இங்கே காணலாம்.

கண்டங்கள் ரீதியாகத் தெரிவாகிய 32 நாடுகள்...

| | | |
|---|---|---|
| ஆசியா கண்டம் | 4 நாடுகள்.. | அவுஸ்திரேலியா, ஈரான், யப்பான், தென்கொரியா. |
| ஆபிரிக்காக்கண்டம் | 5 நாடுகள்.. | அல்ஜீரியா, கமரூன், கானா, நைஜீரியா எலிபன்கூஸ்ற் |
| வடஅமெரிக்கா கண்டம் | 4 நாடுகள்.. | கோஸ்டரிக்கா, ஹொண்டுரஸ், மெக்ஸிக்கோ, அமெரிக்கா |
| தென் அமெரிக்கா | 6 நாடுகள்.. | ஆர்ஜன்தீனா, பிறேசில்,, சிலி, உருகுவே கொலம்பியா, ஈக்குவடோர் |
| ஐரோப்பாக்கண்டம் | 13 நாடுகள்.. | பெல்ஜியம், பொஸ்னியா, குரோசியா, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, கிறீஸ்லாந்து, நெதர்லாந்து போத்துக்கல், ரஷ்ஷியா, ஸ்பெயின் சுவீஸ்லாந்து |

இறுதியாக நடைபெற்ற உலககிண்ணப்போட்டி தென்னாபிரிக்காவில் நடைபெற்றது. 2014 ஆண்டுப்போட்டி வடஅமெரிக்கா கண்டத்திலுள்ள பிறேசிலில் நடைபெறுகின்றது. அடுத்த போட்டி ஐரோப்பாக்கண்டத்திலுள்ள ரஷ்ஷியாவில் 2018லும் 2022ல் ஆசியாக்கண்டத்திலுள்ள கட்டார் நாட்டிலும் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014 உலகக்கோப்பை காற்பந்து (2014 FIFA World Cup) அல்லது 20 ஆவது பீபா உலகக்கிண்ணக் கால்பந்து போட்டித்தொடரின் இறுதிப்போட்டிகள் பிரேசிலில் 2014 ஜூன் 12 முதல் ஜூலை 13 வரை நடைபெற்றன. இரண்டாவது தடவையாக பிரேசிலில் இறுதிப் போட்டிகள் இடம்பெற்றன. முதற்தடவை 1950 உலகக்கோப்பை கால்பந்து போட்டிகள் இங்கு நடைபெற்றன. தென் அமெரிக்காவில் இடம்பெறும் இரண்டாவது உலகக்கோப்பை போட்டி இதுவாகும். முன்னதாக 1978 ஆம் ஆண்டில் அர்ஜென்டினாவில் இடம்பெற்றது. 2007 இல் பன்னாட்டுக் கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பு இந்தப் போட்டிகளை ஏற்று நடத்தும் நாடாக பிரேசிலைத் தேர்ந்தெடுத்தது.

யூன் 2011இல் தொடங்கிய 2014 உலகக்கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டிகளில் பங்கேற்று 31 நாடுகள் இப்போட்டியில் நுழைந்தன. ஏற்று நடத்தும் நாடான பிரேசிலையும் சேர்த்து 32 அணிகள் மோதின. மொத்தம் 64 ஆட்டங்கள் பிரேசிலின் 12 நகரங்களில் நடைபெற்றன. இந்த 12 நகரங்களிலிலும் விளையாட்டரங்கங்கள் புதியதாகவோ புதுப்பிக்கப்பட்டதாகவோ கட்டமைக்கப்பட்டன. இம்முறையே முதன்முதலாகப் புதிய கோல்-கோடு தொழினுட்பம் பயன்படுத்தப்பட்டது. 1930 இலிருந்து உலகக்கோப்பையை வென்ற உலக வாகையாளர்களான உருகுவை, பிரேசில், இத்தாலி, செருமனி, இங்கிலாந்து, அர்ஜெந்தீனா, பிரான்சு மற்றும் ஸ்ப்பானியா ஆகியன 2014 போட்டிகளில் பங்கேற்றன. 2010 உலகக்கோப்பை வாகையாளரான ஸ்ப்பானியா அணி, மற்றும் இங்கிலாந்து, இத்தாலி ஆகியன குழுநிலை ஆட்டங்களில் தோல்வியுற்று வெளியேறின. உருகுவாய் 16 அணிகளின் சுற்றிலும், பிரான்சு காலிறுதியிலும் தோல்வியுற்று வெளியேறின. பிரேசில் அணி அரையிறுதியில் தோல்வியடைந்ததை அடுத்து இறுதிப் போட்டியில் அர்ஜந்தீனாவும், ஜேர்மனியும் போட்டியிட்டன.

இதுவரை அமெரிக்கக் கண்டங்களில் இடம்பெற்ற ஏழ உலகக்கிண்ணப் போட்டிகளிலும் தென் அமெரிக்க அணிகளே வென்றுள்ளன.[இறுதியாட்டத்தில் ஜேர்மனி அர்ஜெந்தீனாவை கூடுதல் நேரத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்று அமெரிக்கக் கண்டங்களில் உலகக்கோப்பையை வென்ற முதல் ஐரோப்பிய அணி என்ற பெருமையைப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிக்குப் பின்னரான அணி தரப்படுத்தல்

வெற்றியாளர் இரண்டாமிடம் மூன்றாமிடம் நான்காமிடம்

| இறுதி | | விளையாட்டு | வெற்றி | சரிசமம் | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஜேர்மனி | 7 | 6 | 1 | 0 | 19 |
| 2 | ஆர்ஜெண்டீனா | 7 | 6 | 0 | 1 | 18 |

3ம், 4ம் இடம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | நெதர்லாந்து | 7 | 6 | 0 | 1 | 18 |
| 4 | பிரேசில் | 7 | 3 | 2 | 2 | 11 |

-

பரிசுத் தொகை

பரிசுத் தொகையினை வென்ற அணிகள்

இவ்விளையாட்டுப் போட்டிக்கு பீபாவினால் உறுதி செய்யப்பட்ட மொத்தத் தொகை $ 576 மில்லியனாகும். இது 2010 உலகக்கோப்பை காற்பந்து போட்டிக்கு கொடுக்கப்பட்டதிலிருந்து 37 வீதம் அதிகரித்துள்ளது. போட்டிக்கு முன்பாக 32 நாட்டு அணிகளும் தலா $1.5 மில்லியனை ஆயத்த செலவுக்காகப் பெறும். போட்டிக்காக பின்வரும் பரிசுத் தொகை வழங்கப்படும்:

$ 8 மில்லியன் குழு நிலைப் போட்டியில் வெளியேறும் ஒவ்வொரு அணிக்கும் (16 அணிகள்)

$ 9 மில்லியன் 16 அணிகளின் சுற்று போட்டியில் வெளியேறும் ஒவ்வொரு அணிக்கும் (8 அணிகள்)

$ 14 மில்லியன் அரை இறுதி போட்டியில் வெளியேறும் ஒவ்வொரு அணிக்கும் (4 அணிகள்)

$ 20 மில்லியன் நான்காமிடம் (பிறேசில்)

$ 22 மில்லியன் மூன்றாமிடம் (நெதர்லாந்து)

$ 25 மில்லியன் இரண்டாமிடம் (ஆஜர்ன்தீனா)

$ 35 மில்லியன் வெற்றியாளர் (ஜேர்மனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஜெர்மனி, அர்ஜெண்டினாவை 1-0 எனும் கணக்கில் வெற்றி பெற்றாலும், இந்தப் போட்டிகளில் அணிகள் ஆடிய விதம், பெற்ற வெற்றிகள், ஏற்பட்ட சர்ச்சைகள் ஆகியவை தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகின்றன. 171 கோல்கள் அடிக்கப்பட்ட இந்தப் போட்டியில், பெரிய அணிகளின் தோல்வி, சிறிய அணிகளின் ஆளுமை ஆகியவை ரசிகர்களிடையே கால்பந்து குறித்த சிந்தனையை, புதிய பரிமாணத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது.

மிகவும் விறுவிறுப்பு மற்றும் பரபரப்புகளுக்கு இடையே நடைபெற்ற இந்த உலக கோப்பை போட்டியில், நடுவர்களின் பல முடிவுகள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. அதேவேளை அவர்கள் எந்தஅளவுக்கு அழுத்தங்களுக்கு ஆளாகிறார்கள் என்பதும் தொலைக்காட்சியில் தெளிவாகப் பார்க்க முடிந்தது.சில அணிகள் ரஷ்யாவில் நடைபெறவுள்ள அடுத்த உலகக் கோப்பை குறித்து பேசவும் ஆரம்பித்துவிட்டனதோல்விக்கான காரணங்களை ஆராய முற்பட்டுள்ள பலநாட்டு அணிகள், தமது பயிற்சியாளர்கள் எதிர்காலம் தொடர்பாக பரிசீலனைகளை தொடங்கியுள்ளன.

உலகிலேயே அதிக சம்பளம் வாங்கும் விளையாட்டு வீரர்களின் பட்டியலை அமெரிக்காவின் போர்ப்ஸ் பத்திரிகை இன்று வெளியிட்டது.

அதன் விபரம் வருமாறு:-

1) ப்ளாயிட் மேவெதர் - பொக்ஸிங் வீரர் (631 கோடி)
2) கிரிஸ்டியானோ ரொனால்டோ - கால்பந்து வீரர் (480 கோடி)
3) லெப்ரான் ஜேம்ஸ் - கூடைப்பந்து வீரர் (432 கோடி)
4) லயனல் மெஸ்ஸி - கால்பந்து வீரர் (384 கோடி)
5) கோப் பிரையண்ட் - கூடைப்பந்து வீரர் (366 கோடி)
6) டைகர் உட்ஸ் - கோல்ப் வீரர் (362 கோடி)
7) ரோஜர் பெடரர் - டென்னிஸ் (336 கோடி)
8) பில் மைக்கேல்சன் - கோல்ப் வீரர் (318 கோடி)
9) ரபேல் நடால் - டென்னிஸ் (264 கோடி)
10) மேட் ரயான், கால்பந்து (258 கோடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணம் பெற்ற நாடுகள்

| ஆண்டு | -நடைபெற்ற நாடு | -1வது | -2வது | -3வது | -4வது |
|---|---|---|---|---|---|
| 1930 | -உருகுவே | -உருகுவே | -ஆஜர்தீன | -அமெரிக்கா | -யூகோஸ்லாவியா |
| 1934 | -இத்தாலி | -இத்தாலி | -செக்கோஸ்லாவியா | -ஜேர்மனி | -ஒஸ்திரியா |
| 1938 | -பிரான்ஸ் | -இத்தாலி | -கங்கேரி | -செக்கோஸ்லாவியா | -ஒஸ்திரியா |
| 1942 | -2வது உலகப்போர் காரணமாக நடைபெறவில்லை | | | | |
| 1946 | -2வது | " | " | " | |
| 1950 | -பிறேசில் | -பிறேசில் | -உருகுவே | -இத்தாலி | -சுவீடன் |
| 1954 | -சுவீஸ் | -ஜேர்மனி | -கங்கேரி | -ஒஸ்திரியா | -உருகுவே |
| 1958 | -சுவீடன் | -பிறேசில் | -சுவீடன் | -பிரான்ஸ் | -ஜேர்மனி |
| 1962 | -சிலி | -பிறேசில் | -செக்கோஸ்லாவியா | -சிலி | -யூக்கோஸ்லாவியா |
| 1966 | -இங்கிலாந்து | -இங்கிலாந்து | -ஜேர்மனி | -போத்துக்கல் | -ரஷ்ஷியா |
| 1970 | -மெக்ஸிக்கோ | -பிறேசில் | -இத்தாலி | -ஜேர்மனி | -உருகுவே |
| 1974 | -ஜேர்மனி | -ஜேர்மனி | -நெதர்லாந்து | -போலந்து | -பிறேசில் |
| 1978 | -ஆஜர்தீனா | -ஆஜர்தீனா | -நெதர்லாந்து | -பிறேசில் | -இத்தாலி |
| 1982 | -ஸ்பெயின் | -இத்தாலி | -ஜேர்மனி | -போலந்து | -பிரான்ஸ் |
| 1986 | -மெக்ஸிக்கோ | -ஆஜர்தீனா | -ஜேர்மனி | -பிரான்ஸ் | -பெல்ஜியம் |
| 1990 | -இத்தாலி | -ஜேர்மனி | -ஆஜர்தீனா | -இத்தாலி | -இங்கிலாந்து |
| 1994 | -அமெரிக்கா | -பிறேசில் | -இத்தாலி | -சுவீடன் | -பல்கேரியா |
| 1998 | -பிரான்ஸ் | -பிரான்ஸ் | -பிறேசில் | -குறோசியா | -நெதர்லாந்து |
| 2002 | -தென்கொரியா | -பிறேசில் | -ஜேர்மனி | -துருக்கி | -தென்கொரியா |
| 2006 | -ஜேர்மனி | -இத்தாலி | -பிரான்ஸ் | -ஜேர்மனி | -போத்துக்கல் |
| 2010 | -தென்னாபிரிக்கா | -ஸ்பெயின் | -நெதர்லாந்து | -ஜேர்மனி | -உருகுவே |
| 2014 | -பிறேசில் | -ஜேர்மனி | -ஆஜர்தீனா | -நெதர்லாந்து | -பிறேசில் |

2018ம் ஆண்டு ரஸ்ஸியாவிலும் 2022ம் ஆண்டு மத்தியகிழக்கு நாடான கட்டாரிலும் நடைபெறவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள்மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப் பேற்று உதவும் மனிதநேயப் பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம்.இதுவரை இத்திட்டத்தில்இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா) - 480-00 யூரோ
02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-மட்டக்களப்பு - 480-00 யூரோ
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி-சுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-கிளிசொச்சி - 480-00 யூரோ
04. செல்வன்.நகுல்.துரையரங்கன்-ஜேர்மனி.
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-திருகோணமலை- 480-00 யூரோ
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-வவுனியா - 480-00 யூரோ
06. செல்வன்.ஜெய்சன்.ஜெயபாலன் - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-திருகோணமலை- 480-00 யூரோ
07. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-வவுனியா - 480-00 யூரோ
08. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
09. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம்- ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
10. திருமதி.ஸ்ரெவ்வானி.அம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
11. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு -மட்டக்களப்பு)- 240-00 யூரோ
12. செல்வி.சுகிர்தா.தவராஜ் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச் செலவு-கிளிநொச்சி - 200-00 யூரோ
13. செல்வி.நந்தனா,செல்வன்.ராகுல்.குமரன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- மட்டக்களப்பு- 200-00 யூரோ
14. செல்வன்.சியாந்த்.எமில்.சர்வானந்தன் - ஜேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 15.03.2014 +2387-04

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. திருமதி. ரதி சின்னத்துரை - London +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. செல்வி. பவித்ரா, செல்வன். விஷ்ணு-விஜயகௌரி-Swiss +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

05. செல்வி. அஜந்தி. அழகராசா - London +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

06. செல்வன். ஜெய்சன். ஜெயபாலன் - London +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. திருமதி. பராசக்தி. பரமாமி - London +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

08. செல்வன்.நகுல்.துரையரங்கன் - Essen +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

09. திருமதி.பிரிந்தாவனி. தனபாலசுந்தரம் - Weeze +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்)

10. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

11. செல்விகள். தீபா. தர்மராசா, வினிஷா. ராஜ்குமார், - Gottingen +40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

12.செல்வி.நந்தனா,செல்வன்.ராகுல்.கனகராசா-Munchengladbach +30-00
(ஆதரவற்றசிறார்ஒருவரின் கல்விச்செலவு மாதாந்த அன்பளிப்பு)

13. செல்வி.சுகிர்தா.தவராஜ் - Wadgassen + 30-00
(ஆதரவற்றசிறார்ஒருவரின் கல்விச்செலவு மாதாந்த அன்பளிப்பு)

14. செல்வன்.ஜோய. சியாந்த் .எமில் சர்வானந்தன்-Blieskastel + 30-00
(ஆதரவற்றசிறார்ஒருவரின் கல்விச்செலவு மாதாந்த அன்பளிப்பு) --------

\+ 3317-04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | | + 3317-04 |
| 5. செல்வன்.பிரதீஸ்.சிறிமோகன்- Düsseldorf (பிறந்தநாள் அன்பளிப்பு) | | + 50-00 |
| 16. திரு.சாந்தலிங்கம்.சிவகுமாரன்-Pforzheim | | + 20-00 |
| | | --------- |
| | | + 3387-04 |

அனுப்பியது:-

| | | |
|---|---|---|
| (1) ரூத் மிஷன் பெண்கள் இல்லம் கிளிநொச்சி | - 700-00 | |
| (2) யோகசுவாமி பெண்கள் இல்லம் செங்கலடி-மட்டக்களப்பு | - 400-00 | |
| வங்கிக் கட்டணம் 2 X 35-00 | - 70-00 | |
| வங்கிவரி 1.01.2014 - 30.03.2014 - 32-64 | | |
| 1.04.2014 - 30.06.2014 - 30-19 | | |
| ------ | | |
| - 62-83 | - 62-83 | |
| | --------- | |
| | -1232-83 | - 1232-83 |
| | | ---------- |
| 31-07-2013 ல் மீதி கையிருப்பு | | + 2154-21 |
| | | ---------- |

கண்!.

**கண்ணால் தெரியாத கடவுளுக்கு உதவுவதைவிட கண்ணால் தெரியும் ஏழைகளுக்கும் இயலாதவர்க்கும் உதவுவதே மனிதனின் முதல்கடமையாகும்!....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்தர் குருகுலம் - களுதாவளை

(சிறுவர் பராமரிப்பு இல்லம் - ம.தெ.எ. பற்று)

තිරුඥානසම්බන්ධර් කුරුකුලම - කළුදාවලයි

(ළමා නිවාසය - ම. ද. ඒ.පත්තු)

THIRUGNANASAMPANTHAR KURUKULAM - KALUTHAVALAI

(CHILDREN'S HOME - M.S.& E. PATTU)

Regd No.: NEP/SS/09

President : ப. குணசீலன்

Secretary : மே. சந்திரசேகரன்

Treasurer : தி. பிரதீபன்

Kaluthavalai (EP),
Sri Lanka.
T.P: 065 2250277

It is an Approved Charity

08.01.2014

பிரதம ஆசிரியர்,
மண் சஞ்சிகை,
ஜேர்மனி.

ஐயா

## குருகுலத்தின் தேவைகள்

இங்கு நாமும் இல்ல மாணவர்களும் நலம், வேண்டுவதும் அஃதே.

தங்களின் கடிதத்தில் குருகுலத்தின் தேவைகள் தொடர்பாக அறியத்தருமாறு கேட்டிருந்தீர்கள்

தற்போது எமது குருகுலத்தில் பயிலும் மாணவர்களுக்கு நூல் நிலையம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது. எனவே எதிர்காலத்தில் எமது குருகுல மாணவர்களுக்கென நூல் நிலையம் ஒன்று அமைப்பதற்கும் அதற்கான தளபாடங்கள் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கும் உதவி செய்தால் மிகவும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்பதை மிகவும் தயவுடன் அறியத்தருகின்றோம்.

தலைவர்

செயலாளர்

திருஞானசம்பந்தர் குருகுலம்,
களுதாவளை,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்தர் குருகுலம் - களுதாவளை

(சிறுவர் பராமரிப்பு இல்லம் - மண்முனை தெ.எ. பற்று)

තිරුඥානසම්බන්ධර් කුරුකුලම - කළුදාවලයි

(ළමා නිවාසය - ම. දෙ. ඊ.පත්තු)

THIRUGNANASAMPANTHAR KURUKULAM - KALUTHAVALAI

(CHILDREN'S HOME - M.S.& E. PATTU)

Regd No.: NEP/SS/70

President : [illegible]
Secretary : [illegible]
Tressurer : [illegible]

Kaluthavalai (EP),
Sri Lanka.
T.P: 065 2250277

Ilaes Approved Charity

08/01/2014.

பிரதம ஆசிரியர்,
மண் சஞ்சிகை,
ஜேர்மனி.

ஐயா,

தங்களைப் போன்று கருணை உள்ளம் படைத்த உதவி வழங்குவோரின் பேருதவியினால் எமது குருகுலம் சிறு நடைபோட்டு வளர்ந்து வருகின்றது.

இங்கு தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவர்களும் எதுவித குறைகளுமின்றி மிகவும் சந்தோசமாக சிறந்த முறையில் தமது கல்வியை மேற்கொண்டு வருகின்றனர்.

1989 இல் ஆரம்பிக்கப்பட்ட எமது குருகுலம் இவ்வருடம் 25வது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்கின்றது. இதனையிட்டு எதிர்வரும் ஜூலை மாதமளவில் வெள்ளிவிழா நிகழ்வொன்றும் நடாத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வழமைபோல தொடர்ந்தும் தங்களதும், மண் சஞ்சிகையின் வாசகர்களதும் உதவிகள் எமது குருகுல மாணவர்களுக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

அனைவரும் சகல பேறுகளும் பெற்று சுகமுடன் வாழ இறைவன் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்

செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருஞானசம்பந்தர் குருகுலம் - களுதாவளை**

(சிறுவர் பராமரிப்பு இல்லம் - ம.தெ.எ. பற்று)

තිරුඥානසම්බන්ධර් කුරුකුලම් - කළුදාවලය

(ළමා නිවාසය - ම. දූ. එ. පත්තු)

**THIRUGNANASAMPANTHAR KURUKULAM - KALUTHAVALAI**

(CHILDREN'S HOME - M.S.& E. PATTU)

Regd No.: NEP/SS/09

President : ......
Secretary : ......
Treasurer : ......

Kaluthavalai (EP),
Sri Lanka.
T.P: 065 2250277

In Iran Approved Charity

08.01.2014.

திரு. வ. சிவராஜா,
பிரதம ஆசிரியர்,
'மண்' சஞ்சிகை,
ஜேர்மனி.

ஐயா

480.00 யூரோ பெற்றுக் கொண்டமை.

தங்களால் 25.11.2013 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்ட 480.00 யூரோ பணம் கிடைக்கப்பெற்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எமது குருகுல மாணவர்களுக்கு தொடர்ந்து தாங்கள் வழங்கி வரும் ஆதரவையிட்டு தங்களுக்கும் தங்களது சஞ்சிகையின் வாசகர்களுக்கும் மிகுந்த நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்களுக்கும் தங்களது வாசகர்களுக்கும் குடும்பத்தினருக்கும் எல்லாம் வல்ல களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையாரின் நல்லருள் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்

**திருஞானசம்பந்தர் குருகுலம் - களுதாவளை**

(சிறுவர் பராமரிப்பு இல்லம் - ம.தெ.எ. பற்று)

களுதாவளை,
மட்டக்களப்பு.

Regd No.: NEP/SS/09

7922

08.01.2014

Germany இல் வசிக்கும்

திரு / திருமதி / செல்வி : V. Sivarajah

அவர்களிடமிருந்து பின்வரும் விபரப்படி பொருளாக / பணமாக ரூபா 83,941-71 மட்டும் நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

| விபரம் | ரூபா. |
|---|---|
| 01. நன்கொடை | 83-941-71 |
| 02. சந்தா | |
| 03. | |
| 04. | |
| மொத்தம் | 83-941-71 |

ரூபா 83-941-71

பெற்றவர் ஒப்பம்:

பாரதி அச்சகம், களுதாவளை, 0770342223



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் கடிதம்

மண் சஞ்சிகை ஆசிரியருக்கு!.

இனிய வாழ்த்துக்கள்!..ஆண்டவர் அருளால் நாங்கள் இங்கு சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கின்றோம். நன்றாகப் படிக்கிறோம். நான் இந்த வருடம் 9ம் ஆண்டு படிக்கிறேன் நீங்கள் எனது படிப்பிற்கும் மற்றும் தேவைகளுக்கும் செய்துவரும் உதவிகளுக்காக மிக மிக நன்றி.

நாங்கள் மிகச்சந்தோஷமாக சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடி மகிழ்ந்தோம். எமக்குப் புதிய உடைகள் எடுத்து எமது மிஸ் தந்தார்கள். நான் பெரிய வகுப்புப் படிப்பதால் பாடசாலைச் செலவுகள் மிகவும் அதிகமாகவே உள்ளன. முக்கியமாக (Tuition fees, School Stationery) பிரத்தியேக பாடவகுப்புக்கள், பாடசாலை உபகரணங்கள், போக்குவரத்துச் செலவுகள் என இப்படிப்பட்ட செலவுகள் அதிகம். தயவுசெய்து உங்கள் வாசகர்களின் உதவிகளைக் கொஞ்சம் கூட்டித்தந்தால் எமக்குப் பேருதவியாக இருக்கும். எங்கள் மிஸ் (பாதுகாவலர்) தான் கூடுதலான தேவைகளை மிகவும் கஸ்டத்துடன் எமக்குச் செய்து தருகிறார்.

தற்போது இங்கு பொருளாதாரக் கஷ்டம் கூடிவிட்டது. மழையும் இவ்வருடம் குறைந்தபடியால் உணவுப்பொருட்கள் அதிக விலை ஏற்றம். மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருந்து படிக்கிறோம். எந்தக் குறையும் இல்லாமல் எங்கள் மிஸ் எங்களைக் கவனிக்கின்றார். நான் நன்றாகப் படிக்கிறேன். பாடசாலையிலும் நல்ல பேர் எடுத்து வருகிறேன்.

எனக்கு உங்கள் வாசகர்கள் செய்துவரும் உதவிகளுக்கு மிக..மிக நன்றி.. உங்கள் பணிகளுக்காக எமது இல்ல மாணவிகள் சார்பில் இறைவனிடம் மன்றாடுகிறேன். இறைவன் உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!..

நன்றியுடன். அன்பு மாணவி
கதர்சிகா.
"ரூத்" மிஷன் –
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமரர் அருளையா (ஐசக்) இன்பராசா அவர்கள்

மலர்வு: 11-10-1952 உதிர்வு: 29-07-2014

(லூாஸ்மாஸ்டர் - ஜேர்மனி)

எமது ஆழ்ந்தஅஞ்சலி

அன்பெல்லாம் தேக்கிவைத்து எமை ஆட்சிசெய்த இன்ப அரசு
அடியறுந்த பெருவிருச்சமாய் ஆதரவின்றியேன் சாய்ந்ததேனோ
முன்பெல்லாம் அரங்கேறியே முகத்தில் அரிதாரம்பூசிநின்றாலும்
முழுதான நகைச்சுவைக்காய் மூச்சைவிடவும் துணிந்ததேனோ
பின்பெல்லா உள்ளங்களிலும் பிடிப்போடு குடியேறினாலும் -ஊரில்
பிள்ளைமனைவி உறவுகளை பரிதவிக்கவிடல் நியாயம்தானோ..?
சிற்றரசன்போல் இந்தமண்ணில் சிலகாலம்தான் வாழ்ந்தீர்களே
சிரித்துச் சிரித்து எம்மையெல்லாம் சிந்திக்கவும் வைத்தீர்களே
ஏற்றமே இலக்காக உங்களின் இறுதிவரைக்கும் இயங்கினீர்களே
எங்களை மகிழவைப்பதையே இமைப்பொழுதும் நினைத்தீர்களே
சீற்றத்தை உங்கள் முகத்தினில் சிறிதளவும் பார்த்தறியோமே-இன்று
சிலையென நீங்களானதால் சிந்தும் கண்ணீர்தான் நிற்கலையே
காற்றுக்கும் நோகாமல் எமக்கு கதைகளெல்லாம் சொன்னீர்களே
காவல்தெய்வமென உறவுகளை காலமெலாம் காத்துநின்றீர்களே
நேற்றுக் கிடைத்தசெய்தி எம் நெஞ்சங்களைச் சுடுகின்றதையா
நித்திலத்தில் உம்மைஎன்று நாம் நேரில்கண்டு மகிழ்ந்திருப்போம்
வேற்றுமண்ணில் மேடைகளேறி பலர் விருப்புகளைத்தீர்த்தீர்களே-எம்
விழிகளையெல்லாம் குளமாக்கிவிட்டு விரைந்துசென்றதேனோ ஐயா..?
அமரர் அருளையா இன்பராசா அவர்களின் பிரிவுத்துயரோடு
அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்..

கவிச்சுடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Skantha

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org